விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்


குஜராத் வெற்றி பக்கம் 4

சங்கு 26
ஒலி 101 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை (30.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்ளே ▶▶▶
உங்கள் சங்குநாதத்தில்...!


- நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே
- தெளிவே என் சிந்தனையுள்
- எல்லை மீறும் சமூக வலைத்தள பாவனைகள்
- ஆலடி மாநாடு
- ஆச்சி அறிவுரை
- கடன் எனும் மாயவலை
- வியாசர் கேள்வி - பதில்கள்
- சுகமான விடியல்




இன்னும் பல சிறப்புக்களுடன்...!
வாசகர்களே சிக்கத் தவறாதீர்கள்

# பிரதமர் மோடியைச் சந்திக்க தமிழ்க் கட்சிகளுக்கு நேர ஒதுக்கீடு
## உறுதி செய்தது இந்தியத் தூதரகம்

(கொழும்பு)
பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், அவரைச் சந்தித்துத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்துக் கலந்துரையாட தமிழ்க் கட்சிகளுக்கு நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.
குறித்த சந்திப்பானது பாரதப்

23ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை – இந்திய
# பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

(டில்லி)
இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது பாது

23ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் இன்று சூரியன் சுட்டெரிக்கும்

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களிலும் இன்று வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்

23ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி ஆரம்பம்



05ஆம் பக்கம் பார்க்க

# 'ஆனையிறவு உப்பு' ரஜ லுணுவாகியது

(ஆனையிறவு)
ஆனையிறவு உப்பளத்தில் நேற்று முதல் உப்பு உற்பத்தி ஆரம்பமாகியுள்ள நிலையில் குறித்த உப்பானது "ரஜ லுணு" எனும் பெயரில் பொதியிடப்




23ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ்மா அதிபர் சிறையில் உள்ளார்
# ஊழல்வாதிகளுடன் மோத நாம் தயாராகிவிட்டோம்
## ஜனாதிபதி அநுர அதிரடி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
ஊழல்வாதிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது நாம் செய்வது தெரிகிறதல்லவா? ஊழல்வாதிகளுடன் மோதுவதற்கு நாம் தயாராகிவிட்டோம். இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். *(04ஆம் பக்கம் பார்க்க)*



# தேர்தல் சட்டத்தின் பிரகாரமே வேட்புமனுக்கள் நிராகரிப்பு
## மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன்

(கொழும்பு)
தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் தமிழர் பகுதிகளில் மாத்திரமின்றி நாடு தழுவிய ரீதியில் பரவலாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரி

23ஆம் பக்கம் பார்க்க




# வலுப்பெறுகின்றனர் விடுதலைப் புலிகள்
## பதறுகிறார் அஜித் பி.பெரேரா

(கொழும்பு)
சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெறுவதற்குச் சாதகமான சாத்தி

23ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் – கந்தரோடையில்
# மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு



(சுன்னாகம்)
சுன்னாகம் - கந்தரோடைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்தி

23ஆம் பக்கம் பார்க்க

# மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வீதியால் நடந்து சென்ற குடும்பப் பெண் ஒருவர் மயங்கி விழுந்து, வைத்தியசாலையில்

04ஆம் பக்கம் பார்க்க

# தலைமன்னார் கடற்பரப்பில் மிதந்து வந்த கஞ்சாப் பொதிகள்

(மன்னார்)
தலைமன்னார் மணல் திட்டு 1 மற்றும் 2 இற்கு இடைப்பட்ட கடற்பகுதியில் கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்



23ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில்
K.K.S சந்தி பலாலி விமான
நிலையம் என்பவற்றுக்கு
இடைப்பட்ட பிரதேசத்தில்
காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**075 521 3533**

(3781)

## வேலையாட்கள் தேவை

ஈரஅரிசி அரைத்து வறுக்க, மில்
வேலைக்கு பெண் வேலையாட்கள்
தேவை. இடம் : நெல்லியடி
வயது (20-35)
சம்பளம் : 2500/= இற்கு மேல்

தொடர்புகளுக்கு

**077 936 1356**

(983)

## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்திற்குமான உள்நாட்டு,
வெளிநாட்டு திருமண சேவை,
அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு
மணமகன், மணமகள்

**பதிவுக் கட்டணம் இலவசம்**

**டச்சு வீதி, கல்வியங்காடு.**

whatsapp
076 050 3863, 076 311 9485

(982)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம்
ஒன்றிற்கு தங்கி நின்று வேலை
செய்வதற்கு பணிப்பெண் தேவை.
வயது 35 இற்கு உட்பட்டவர்கள்
விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**075 880 7718**

(3787)

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஐந்து
சந்தி பள்ளி வாசல்
அருகில் நீளம் 37 அடி,
அகலம் 20 அடி

தொடர்புகளுக்கு :

**077 617 6413**

(3785)

## A/L 2027, 2026, 2025 Day Class
## (Media) ஊடகக் கற்கை

Zoom மற்றும் நேரடி வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MR யோ. கோணேஸ்**

தொடர்பு : **077 644 6514**

(C-2562)

## உடனடி விற்பனைக்கு

பலாலி றோட் உரும்பிராய்ப் பகுதியில் கடை
விற்பனைக்கு உள்ளது. 16 அடி அகலம்
37 அடி நீளமான கடையும், 12 அடி அகலமான
37 அடி நீளமான கடையும் உடனடியாக
விற்பனைக்கு உள்ளது.

**077 151 0027, 077 123 5307**

(3754)

## காணி விற்பனைக்கு உண்டு

**உரும்பிராய் வடக்கில் 13½**
**பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,500,000 (பதினைந்து இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1 ½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு

**077 038 5455 / 077 468 3354**

(3788)

## வேலைக்கு ஆட்கள் தேவை

கோப்பாய் பகுதியில் இயங்கும்
உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு
சமையல் பெண் உதவியாளர்
தேவை. சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**076 167 2824**

(3784)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
1984 ஆம் ஆண்டு பிறந்த சுவாதி 4 ஆம்
பாதம், கிரக பாவம் 20, செவ்வாய் 3 இல்.
UK இல் Citizenship கொண்ட
பொறியியலாளராகக் கடமையாற்றும்
மணமகனுக்கு பொருத்தமான
மணமகள் விரும்பத்தக்கது.

(3776)

**பென்சுலானந்தா திருமண சேவை**
whatsapp : + 94769738962
+ 94705546386

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை கூழாவடி,
தேவாலய வீதியில் ஒரு பரப்பு
12.53 குளி (9 அடி பாதையுடன்)
அளவுடைய காணியில் அமைந்த
வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

**071 043 1996**

(3786)

## புகையிலை விற்பனைக்கு

அறுவடைக்குத் தயாராக
உள்ள பாணிப்புகையிலை
(வடமராட்சி) 6500
கன்றுகள் விற்பனைக்கு.

**076 287 8157**

(974)

## 1 ஆம் ஆண்டு நினைவு தினமும்
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தாயின் மடியில்
15 . 02 . 1952



கந்தன் கழலடியில்
09 . 04 . 2024

### அமரர் சின்னராசா சிவபாலசிங்கம்
### (ஓய்வு நிலை கிராம அலுவலர்)

திதி: வளர்பிறைத் துதியை

தந்தையாய்த் தாயாய்
தரணியில் எமைத்தாங்கி
தக்க புகழ் சேர்த்து தலைநிமிர வைத்து
தகப்பன் சாமியாய் சிந்தை நிறைந்து
கந்தவன நாதனின் திருப்பாதமதில்
காதலோடு சங்கமித்தாலும்
எங்கள் உயிரில் என்றும்
இறையாய் வாழ்வீர்கள்.

கடந்த 09.04.2024 அன்று குகபதமடைந்த எமது அன்புத் தந்தை அமரர் சின்னராசா சிவபாலசிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை (31.03.2025) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெற உள்ளது. காலை 9 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெற இருப்பதால் குறித்த இரு நிகழ்விலும் தங்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(C-2574)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில்**
**10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

(3779)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389,**
**077 986 5457**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் விடுதலை உடனடியாக சாத்தியமில்லை

## வவுனியாவில் அமைச்சர் பிமல்

**(வவுனியா)**

**அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும்; ஆனால் உடனடியாக அது சாத்தியப்படாது எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**



வவுனியா, குடியிருப்புப் பகுதியில் நேற்றைய தினம் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் தான் ஆகியுள்ளது.

ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனைப் படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத் தான் செய்ய முடியும்.

காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கைத்தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். வரவு- செலவுத் திட்டத்தில் கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவு அதிக நிதியை நாம் வடக்கிற்கு ஒதுக்கியுள்ளோம்.

1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பட்டலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. தெற்கில் ஜே.வி.பி, யு.என்.பி பிரிந்து இருந்தது போன்று, வடக்கில் எல்.ரீ.ரீ.ஈ, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப். என பிரிந்து செயற்பட்டு இருந்தார்கள்.

வதை முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது. படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-8-250)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலா இடம்பெறும் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-8)

## செல்லப்பா சுவாமி குருபூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 110 ஆவது குரு பூஜை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு சுவாமிகளுக்கு அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து திருமுறை மற்றும் நற்சிந்தனைப் பாடல்கள் நடைபெறும்.

முற்பகல் 11.30 மணிக்கு குருபூஜை இடம்பெற்றதையடுத்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(நி-8)

## ஹெரோயினுடன் புதுக்குடியிருப்பில் கைது

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தப்பட்ட கிராம சேவையாளர் ஒருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளினைத் தொடர்ந்து வைத்தியப் பரிசோதனையின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியைச்சேர்ந்த இவர் கிராம சேவையாளராக இருந்த போது ஐஸ் போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையான பின்னர் கிராம சேவையாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-299)

4 ஆம் ஆண்டு நினைவில்




மொழி ஞாயிறு

K.C.சிவசுப்பிரமணியம்

(ஆங்கில பேராசான்)

ஆண்டு நான்கு ஓடி மறைந்தாலும்,
உங்கள் பிரிவால் எங்கள் கண்கள்
கனத்திருக்க,
உங்கள் குரல் எங்கள் நினைவில் நிலைத்திருக்க,
உங்கள் சொற்கள் எங்களை வழிகாட்ட
உங்கள் ஞானம் எங்களை மேம்படுத்த,
உங்கள் நினைவுகள் எங்கவில் நீக்கமற நிறைந்திருக்கும்!

உங்கள் பாடம் எங்கள் அடையாளம்,
உங்கள் சொற்கள் எங்கள் பலம்,
உங்கள் அன்பு எங்கள் வரம்
உங்கள் அறிவு எங்கள் வழிகாட்டி....

கனத்திருக்கும் இதயத்தில் கண்ணீருடன்
இன்றும் நாங்கள்.......

கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு.

குடும்பத்தினர்,
உறவினர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழல் வாதி ...

பெலியத்தையில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி அநுர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது,

இப்போது நாம் செய்கின்ற விடயங்கள் தெரிகின்றதல்லவா அச்சப்பட வேண்டாம். மோசடியில் ஈடுபடுகின்றவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுடன் மோதுவதற்கு நாம் தயாராகவுள்ளளோம்.

அவர்கள் எவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் இந்த ஊழல் மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குவதை நிறுத்தப் போவதில்லை. நாம் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்திற்குப் பொருத்தமானவர்களை நியமித்துள்ளோம். அவர்கள் இவ்விட யத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து வருகிறது. இப்போது பலருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு மேல் நீதிமன்றத்தில் வழக்கு முன்னெடுக் கப்படுகின்றது.

சர்ச்சைக்குரிய அநேகமான வழக்கு கள் எதிர்வரும் இரு மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளது.

எமக்கு அதனை விசாரணை செய்து தாக்கல் செய்யவே இயலுமை உண்டு. அவர்களைச் சிறையில் அடைப்பதற்கான அதிகாரம் எமக்கு இல்லை அதனை நீதிமன்றமே செய்ய வேண்டும்.

இலங்கையில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்படு வார் என்று யாரும் நினைக்கவில்லை.

பொலிஸ்மா அதிபர் தனக்கு வழங்கப் பட்ட கடமையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அரசியல்வாதிகளின் தேவை களை நிறைவேற்றியமையால் தேசபந்து தென்னக்கோனுக்கு நடந்த விடயம் இதுவாகும்.

நீங்கள்(பொலிஸார்) சரியாக சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள். எமக்கு உதவி செய்யுங்கள்.

பொலிஸ் உத்தியோகத்தர்களை நாங்கள் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துவதில்லை. அவர்களுக்கு அதிகாரம் சுதந்திரத்தை பெற்றுக் கொடுத் துள்ளோம். முன்னைய காலங்களில் எவரையாவது கைது செய்ய முன்னர் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என வினவுகின்றனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்றால் அந்தப்பக்கம் தலை வைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள். எதற்காக மோத வேண்டும் என நினைப்பார்கள் அவ்வாறே பொலி ஸார் இருந்தனர்.

தற்போது முன்னாள் அமைச்சர்கள் மூவர் மற்றும் பொலிஸ்மா அதிபர் விளக்க மறியலில் உள்ளனர் என ஜனாதிபதி அநுர தெரிவித்தார். (ந-7)

## மயங்கி விழுந் ...


சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதன்போது புங் குடுதீவு, 14ஆம் வட்டாரத்தை சேர்ந்த சி.வசந்தா (வயது 68) என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்

குறித்த பெண் நேற்று முன்தினம் வீதியில் நடந்து சென்று கொண்டிருந் தார். இதன்போது திடீரென மயங்கி கீழே விழுந்துள்ளார். இந்நிலையில் அவர் புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். மரண விசாரணை களை திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேமகுமார் மேற் கொண்டார். (ந-7,60)

# குஜராத்துக்கு முதல் வெற்றி

## மீண்டும் விழுந்தது மும்பை



சாய் சுதர்சன் (63) அரைச்சதம் கடந்து கைகொடுக்க குஜராத் அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதல் வெற்றி பெற்றது. மும்பை அணி மீண்டும் தோல்வி யடைந்தது.

குஜராத்தின் அஹமதாபாத்தில் உள்ள உலகின் பெரிய மோடி மைதானத்தில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் குஜராத், மும்பை அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில், 8 விக்கெட்டுக்களை இழந்து, 196 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 6 விக் கெட்டுக்களை இழந்து 160ஓட்டங்கள் மட்டும் எடுத்து 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ந-7)


# காணவில்லை



## கமலேந்திரராசா நிஷாந்தன்

மனநிலை பாதிப்புடைய கமலேந்திரராசா நிஷாந்தன் 24.03.2025 திங்கட்கிழமையில் இருந்து காணவில்லை.

கண்டவர்கள் 076 838 3803 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-3789)

வேலணை மேற்கு,
6ம் வட்டாரம்.

குடும்பத்தினர்


# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 480 | 400 | 400-450 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 | 400-450 | 800 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250-280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200-250 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 750 | 600-800 | 800 | 650 | 800 |
| பூசணி | 160 | 160 | 150 | 120-145 | 200 |
| புடோல் | 150 | 250 | 150-200 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 60-80 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 300 | 100-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 160 | 145 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 500-600 | 500 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300-350 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 260 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 450 | 300 | 300-380 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 160 | 250 | 250 | 200-220 | 300 |
| கறிமிளகாய் | 850 | 600 | 450 | 500-600 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 3000 | 2000 | 1500-2000 | 3000 |
| போஞ்சி | 400 | 550 | 500 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 450 | 250 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 150 | 60-80 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 100-150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 240-300 | 150 | 150-250 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 450 | 500 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 60 | 100 | 200 |


# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
20 - 11 - 1956



ஆண்டவன் அடியில்
29 - 03 - 2025

## ஸ்ரீஸ்காந்தன் வசந்தா

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்காந்தன் வசந்தா நேற்று (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீஸ்காந்தன் (உரிமையாளர் - அம்பாள் களஞ்சியம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவகஜனி (சாலினி, வளர்மதி முன்பள்ளி ஆசிரியர், கொக்குவில்), சாரங்கன் (பதில் முகாமையாளர் - ESOFT METRO CAMPUS) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வரதா மற்றும் வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் உருத்திரக்கண்ணா அவர்களின் அன்பு மாமியாரும் ஷஸ்வின், ஸ்ரீவர்ணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புஸ்பமாலா, இரஞ்சிதமாலா, ஸ்ரீதரன் (பொலிவியா), காலஞ்சென்றவர்களான ஜீவமாலா, சிறிவரதன் மற்றும் ஸ்ரீபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் இரத்தினவேல் (அத்தான்), தர்மசேனன், விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் கலாராணி, அருளானந்தம், பற்றீசியா ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2025) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பின்னர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

36/1, பிரம்படி 1ம் ஒழுங்கை,
[illegible]
[illegible] புங்குடுதீவு.

(984)

தகவல் : குடும்பத்தினர்
074 132 2350, 076 644 2214,
077 936 2632


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதியானின் வருடாந்த கும்பாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் தவத்திரு வே.முருகேசு சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வருடாந்த கும்பாபிஷேக தினம் நாளை திங்கட்கிழமை காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகத்துடன் கூடிய சண்முக அர்ச்சனையும் வேற்பெருமானின் வீதி உலாவும் இடம் பெறவுள்ளது. எனவே அடியவர்கள் அன்றைய தினம் இடம்பெறும் பூஜை வழிபாட்டிலும் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெறும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறியத்தந்துள்ளனர். (க-நி-8)

# வீதியில் பயணித்த பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

## விரைந்து செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபர்கள் கைது

(தருமபுரம்)

ஏ 35 பிரதான வீதி புளியம் பொக்கணைப் பகுதியில் வீதியில் பயணித்த பெண்ணிடம் தங் கச் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ 35 பிரதான வீதி ஊடாக பரந்தன் பெரியகுளம் கிராம அலுவலர் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு புளியம்பொக்கனைப் பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் அதே பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் அந்தப் பெண் அணிந்திருந்த மூன்று லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்று ள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய விரைவாக செயற்பட்ட தருமபுரம் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் துரத்திச் சென்று இராமநாதபுரம் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து குறித்த பெண்ணிடம் அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலி உட்பட உடைமையில் இருந்து 2.25 மில்லிகிராம் கெரோயினும் 20 கிராம் கேரளாக் கஞ்சாவும் திருட்டில் ஈடுபடுவதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். அத்துடன் தடயப் பொருட்கள் மற்றும் சந்தேக நபர்களையும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (நி-8-316)


# பியானோ - PIANO



**வாத்திய கருவிகள் விற்பனைக்கு**

இறக்குமதி செய்யப்பட்ட மிக நேர்த்தியான தரத்திலுள்ள யமஹா, கவாய் மற்றும் பல வர்த்தக நாம பியானோ வாத்திய கருவிகள் விற்பனைக்குண்டு விலை 200,000/= மேல்

**மேலதிக சேவைகள்**
- அமரும் கதிரை
- கொண்டு செல்ல வாகனம்
- முதல் இசை மெருகூட்டல் இலவசம்
- விற்பனைக்கு பிந்திய சேவை உத்தரவாதம்

(கு-106)

NEVIL PIANO CENTRE
Piano Tuning Servicing and Repairs
No 248 N, Polgahena, Ragama.
Tel : 077 4935767


# மீள ஆரம்பிக்கப்பட்டது ஆனையிறவு உப்பு உற்பத்தி



தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில். மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரின் பங் கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது. (நி-8)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலோன் சிங்கர் பாடகர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இசைக் கலையகம் நடத்தும் "மாபெரும் சிலோன் சிங்கர் செலக்ஷன்" 2 ஆம் சுற்று இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருமறைக் கலா மன்றம் கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

தலைவர் சிறில்ரவிசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சமூக சேவையாளர் ஆ.சுலக்ஷன் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராகவும் அருளானந்தம் தங்கம் அறக்கட்டளை (ஸ்தாபகர்) திருமதி. அ.யேட்றீசம்மா கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (நி-8)

## மனவளக்கலைமன்ற யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல்.81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாக உள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர எளிமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங்கப் படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் சு.மீரா அவர்கள் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (நி-8)


### மணமகள் தேவை

1993, இந்து, திருவாதிரை, IT SUPPORT
பூர்வீகம் – புலோலி, வதியுமிடம் – AUSTRALIA
மணமகள் பதிவு இல: 10686.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-108)
www.EQMarriageService.com


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 24/15, சிவன்கோவில் வீதி, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04 சிவன்கோவில் வீதியிலுள்ள இல:24/15 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **லில்லி அரசரத்தினம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **ஜெயராஜசிங்கம் ராஜநாயகம் மனைவி (கைம்பெண்) ஜெயதேவி** ஆகியவர் குறித்த ஆதனம் தனது பெரியம்மா அரசரட்ணம் மனைவி லில்லி என்பவரால் தனது தாயார் எட்வேட் நைற் மனைவி அன்புமணி கிறேஸ் என்பவருக்கு 1947 ஆம் ஆண்டு வாய்மூலமாக நன்கொடையளிக்கப்பட்டிருந்தது எனவும், தனது தாயார் குறித்த ஆதனத்தை 1987 ஆம் ஆண்டு தனக்கு வாய்மூலமாக நன்கொடையளித்திருந்தார் எனவும் தனது தாயார் 1989 ஆம் ஆண்டளவில் காலஞ்சென்றதிலிருந்து குறித்த ஆதனத்தை தானே 17 வருடங்களாக ஆண்டனுபவித்து வருவதாகவும், குறித்த ஆதனத்தின் ஆட்சியானது தன்னிடமே இருந்து வந்துள்ளதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 1491/ 31.05.2006 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றி யிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**இராசேந்திரம் மனோகரனும் பெண் வசந்தினியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10264/11.05.2009 ஆம் இலக்க உறுதியால் குறித்த **ஜெயராஜசிங்கம் ராஜநாயகம் கைம்பெண் ஜெயதேவி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**மருதபிள்ளை ஜெயசுதனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு தி.அருச்சுனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 636/10.03.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த **இராசேந்திரம் மனோகரனும் பெண் வசந்தினியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.


குறித்த **மருதபிள்ளை ஜெயசுதனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மருதபிள்ளை ஜெயசுதனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(3782)

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

## மரண அறிவித்தல்



தோற்றம்
1953 . 04 - 05

மறைவு
2025 . 03 . 28

## பசுபதி குணசேகரம்

கட்டுவன் வீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பசுபதி குணசேகரம் 28.03.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாதர்-வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், தவராணியின் அன்புக் கணவரும், தக்சன், வினோத், தினேஷ், நிவேஜன், தர்சிகன், சுரேக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகினி, நியுறிஷா ஆகியோரின் பாசமிகு மாமனும், திலானின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் தவராசாவின் அன்புச் சகோதரனும், தியாகராசா, அம்பிகாதேவி, சிறீதரன், சந்திராதேவி, சத்தியநிதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 30.03.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கட்டுவன் வீதி,
மல்லாகம்.

*(சி-2571)*

*தகவல் :*
குடும்பத்தினர்

## இராசிபலன்

30.03.2025
பங்குனி 16, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பிற்பகல் 2.56 மணிவரை.

ரேவதி முன்னிரவு 6.43 மணிவரை
சுபநேரம் 9.13-10.43 மணிவரை
இராகுகாலம் 4.43- 6.13 மணிவரை

சந்திராஷ்டமம்.
பூரம், உத்தரம்

**வளவன்**




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தேவையற்ற மனக் குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது, சுற்றத்தார் வரவால் சுபவிரயங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.




தொலை தூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மனநிறைவு கூடும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பிரயாண பயமுண்டு.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




வாகன சுகமுண்டு, காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் சந்திக்கும் வாய்ப்புண்டு.




ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு, உள்ளம் மகிழும் சம்பவமென்று நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வ நிலை உயரும், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.




வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**உன்னால் முழுந்ததை எல்லாம் செய்துவிட்டு பிறகு இறைவனிடம் உதவிகேள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒற்றுமையும் இராஜதந்திரமும் இல்லாத தமிழ் எம்.பிக்கள்


இலங்கைப் பாராளுமன்றத்தில் அநுரகுமார திஸாநாயக்கவின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் எமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் அநுர அரசைக் கடுமையாகத் தாக்குவதாக இருப்பதைக் காணமுடிகிறது.

அதிலும் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் அர்ச்சுனா, இரா. சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் உரைகள் கொந்தளித்த மன நிலையுடன் இருப்பதைக் காணமுடிகிறது.

இந்நிலையில் மருத்துவர் அர்ச்சுனா பாராளுமன்றத்திற்குப் புதியவர். ஆனால் சாணக்கியன், கஜேந்திரகுமார் ஆகியோர் ஏலவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள்.

இதில் மைத்திரியின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக சாணக்கியன் வாக்களித்ததும் தெரிந்ததே. இந்நிலையில் அநுரவின் வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக எதிர்ப்பதில் சாணக்கியன் காட்டுகின்ற உத்வேகம் ஏன் என்பது புரியவில்லை.





அதேநேரம் தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற இராஜதந்திரமும் எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவர்களின் உரைகளைப் பார்க்கும் போது எப்படியும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தமிழ் இனத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தி விட வேண்டும் என்ற எண்ணம் இருப்பது தெரிகிறது.

உண்மையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதாக இருந்தால், அநுரவின் அரசாங்கத்தை வாலாயப்படுத்துவதில் அதீத கரிசனை காட்ட வேண்டும்.

இதைச் செய்யாமல், பாராளுமன்றத்தில் கிடைத்த நேரத்தை உணர்ச்சி வசப்பட்டும் கோபப்பட்டும் தனிப்பட்டவர்களை விமர்சித்து இழிவுபடுத்துவதிலும் செலவிடுவதாக இருந்தால் எங்கள் நிலை அம்போவென்றாகிவிடும்.

அநுர அரசாங்கத்தை எதிர்ப்பதன் மூலமே ஜனாதிபதி அநுரவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய செல்வாக்கைத் தகர்க்க முடியும் என்று தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுவார்களாயின், அது மகா தவறாகும்.

மாறாக, எதிர்க்கட்சி வரிசையில் நாம் இருந்தாலும் ஜனாதிபதி அநுரவுடன் இணைந்து தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை நகர்த்துவதிலும் அடையக்கூடிய வெற்றிகளே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான கரிசனையை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தும்.

எனினும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், பாராளுமன்றத்தில் கெம்பி எழுந்து உரத்த குரலில் ஆற்றுகின்ற உரைகள் இனி செல்லுபடியற்றவை. அவை காலாவதியாகி விட்டன.

இத்தகைய உரைகளை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது - கோட்டாபய ஜனாதிபதியாக வெற்றி பெற்ற போது, தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் அந்த நேரத்தில் மிகவும் பௌவ்யமாக இருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது உரத்த குரலில் பேசுகிறார்கள்.

ஆனால் தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் தற்போது மாறிவிட்டன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாட்டில் ஊழலற்ற ஆட்சி நிலவினால் மட்டுமே ஏனைய அனைத்து விடயங்களும் செம்மையாக நடந்தேறும் என்ற உண்மையை தமிழ் மக்கள் பரிபூரணமாக நம்புகின்றனர்.

இந்நிலையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகள் ஒவ்வொன்றும் பெறுமதியானதாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆக, நிதர்சனமான இவ்வுண்மையை அறியாத எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எவ்வளவு தூரம் உச்சஸ்தாயியில் பேச முடியுமோ அந்தளவுக்குப் பேசுவது தான் தமிழ் மக்களை ஈர்க்கும் என நினைத்து உள்ளதையும் இழக்கப் போகின்றனர்.

**சிங்கள மக்களின் மனநிலை யாது?**

தமிழ் மக்களுக்கு மிகப் பெரும் கொடுமையை-துரோகத்தை இழைத்த மகிந்த ராஜபக்ஷ தரப்பை எங்களால் தண்டிக்க முடியாமல் போயிற்று.

இருந்தும் தமிழ் மக்களின் விருப்பத்தை சிங்கள மக்கள் நிறைவேற்றி வைத்துள்ளனர். கெட்டவன் கெட வேண்டும். அப்போது தான் நல்லது நடக்கும் என்பது சோதிடக் குறிப்பு.

இஃது சோதிடத்திற்கு மட்டுமல்ல, அனைத்திற்கும் பொருந்துவதாகும்.

எனவே ராஜபக்ஷ குடும்பத்தை ஆட்சிப் பீடத்திலிருந்து துரத்திய சிங்கள மக்கள் 1983 இல் இருந்த சிங்கள மக்கள் அல்ல. அவர்களும் தங்களை மாற்றியுள்ளனர்.

1983 இல் இருந்த சிங்களவர்களாக இருந்தால், அவர்கள் அரகலப் போராட்டத்தை ஒரு போதும் நடத்தியிருக்க மாட்டார்கள்.

இதை இன்னொரு கோணத்தில் பார்ப்போமாக இருந்தால், வெறும் மூன்று ஆசனங்களை மட்டுமே பாராளுமன்றத்தில் பெற்றிருந்த ஜே.வி.பி ஒருபெரும் மறுமலர்ச்சியாக ஆட்சிப்பீடத்தில் அமர்வதற்கும் சிங்கள மக்களே காரணமாவர்.

ஆக, பாராளுமன்றத்தின் அடிப்படை மரபுகளை மீறுவது போல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்வார்களாயின்; அது சிங்கள மக்களை வெறுப்படையச் செய்யும்.

சிலவேளைகளில் ஜே.ஆர் ஜெயவர்த்தன காலத்தில் இருந்த சிறில் மத்தியு போன்ற பச்சை இனவாதிகள் இல்லாமல் போனதன் விளைவோ தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கெம்பல் [illegible] நிலையை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தி விடும். இந்த நிலைமை ஏற்படுவது அவ்வளவு நல்லதல்ல.

**தமிழ் எம்.பிக்களிடம் ஒற்றுமையுண்டா?**

இவையாவற்றுக்கும் மேலாக, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் மோதிக் கொள்வது துரதிஷ்டமானது.

அதாவது அமைச்சர் சந்திரசேகரும் மருத்துவர் அர்ச்சுனாவும் பாராளுமன்றத்தில் அடிக்கடி மோதிக் கொள்வது ஆரோக்கியமான செயற்பாடல்ல.

இவர்களுக்கிடையில் இடம்பெறும் மோதல்களும் வார்த்தைப் பிரயோகங்களும் எமக்கும் மலையகத் தமிழ் மக்களுக்குமிடையில் கடுமையான கசப்பையும் பிளவையும் தூண்டுவதாக இருக்கும்.

ஆகையால் தேசிய மக்கள் சக்தியில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை எதிரிகளாகப் பார்க்க வேண்டியதில்லை.

ஏதோவொரு வகையில் அவர்களுடனும் சுமுகமான தொடர்பாடலை ஏற்படுத்தி, அவர்கள் ஊடாகவும் எங்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் மோதிக் கொள்வது மட்டுமே நடந்தாகும்.

**யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த மார்ச் 25 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில், கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தின் தொடக்கமே குழப்பமாகி விட, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

தொடர்ந்து கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் அர்ச்சுனாவும் இளங்குமரனும் தொடர்ச்சியாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் தனிப்பட்ட ரீதியில் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் தாக்கித் தங்களை தாழ்த்திக் கொண்டனர்.

கூட்டத்தை நடத்த முடியாமல் அமைச்சர் சந்திரசேகர் திணறியதைக் காண முடிந்தது.

தொடர்ந்து அவைத் தலைவர் சிவஞானம் சபையில் இருந்து வெளியேற, ஈற்றில் கூட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலையில் யாழ்.அரச அதிபர் ம.பிரதீபன் கூட்டம் நிறுத்தப்படுவதாகக் கூறியிருந்தார்.

இங்கு தான் ஒரு விடயத்தை நாம் கூறிவைக்க வேண்டும். அதாவது, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பது பெறுமதியானது. எனினும் பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்ததைக் காண முடிந்தது.

தவிர, அரச அதிகாரிகள் சம்பவங்களைப் பார்த்து சிரித்தனர். சில இடங்களில் ஒரு சில அரச அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினரை எதிர்க்கின்ற அளவுக்குத் துணிந்திருந்தனர்.

இவற்றுக்குக் காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களைத் தாழ்த்தி, தமது கௌரவத்தையும் பெறுமதியையும் குறைத்துக் கொள்வதாகும்.

எனவே அரச அதிகாரிகள் சிரித்து மகிழ்வதற்கான கூட்டமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமையாமல், அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் மிகச் சிறந்த தீர்மானங்களை எடுக்கும் பெறுமதியான கூட்டமாக இருக்க வேண்டும்.

■ விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** இனி எங்கட சித்த மருத்துவத் துறையும் எங்களிட்ட இருந்து பறிபோகும் போல.

**மூப்பர்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை ஆங்கில மொழிக்கு மாற்ற வேணும் எண்ட கோரிக்கை வலுத்து வருவதாகக் கேள்விப்பட்டன்.

இப்பவே எங்கட சித்த மருத்துவத் துறையில முஸ்லிம் மாணவர்கள் நிறையக் கற்கினம்.

இந்த நிலையில, சித்த மருத்துவத்தை ஆங்கிலத்தில விரிவுரை ஆற்றினால் பிறகென்ன? சிங்கள மாணவர்களும் வந்து சேருவினம். அதுக்குப்பிறகு சித்த மருத்துவமும் எங்களிட்ட இருந்து பறிபோகும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில மருத்துவபீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், சட்டத்துறை ஆகியவற்றில சிங்கள மாணவர்களே அதிகமாக இருக்கினம்.

இதற்கு இந்த வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில நடந்த 39 ஆவது பட்டமளிப்பு விழா நல்ல எடுத்துக்காட்டு.

**வாத்தியார்:** எல்லாம் எங்கடையள் செய்த வேலை. தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் தேவை எண்டு கேட்டம். இலங்கையில நாங்கள் கேட்டது கிடைத்ததெண்டால், அது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மட்டும் தான். இருந்தும் அதையும் நாங்கள் தாரை வார்த்துக் கொடுத்திட்டம்.

**சாத்திரியார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** விஞ்ஞான பீடத்தில முதல் வருட விரிவுரைகள் தமிழ் மொழியில நடக்கும் எண்ட கலைத்திட்டம் இருந்திருக்குமாயின், சட்டத்துறையில முதல் வருடம் தமிழில் விரிவுரை என்ற நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்குமாயின், எங்கட தமிழ் மாணவர்களுக்கான சந்தர்ப்பம் குறித்த துறைகளில அதிகமாக இருந்திருக்கும்.

என்ன செய்யிறது. ஏதோ ஆங்கிலத்தில வெட்டி விழுத்தப் போறமெண்டு வெளிக்கிட்டு, கடைசியாக எங்கட பிள்ளைகளுக்கு ஈனத்தை இழைத்தது தான் மிச்சம்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்த மாகியது. நிசப்தத்தைக் கலைக்கப் பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் எங்கட சித்த மருத்துவத்துறை தமிழ் மொழியில நடக்க வேணும். சித்த மருத்துவம் என்பது சித்தர்கள் தந்தது.

தமிழ் மொழியில இருக்கிற சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில நடத்துவ தென்பது தமிழை அழிப்பதற்கான திட்டம் எண்டு தான் சொல்ல வேணும்.

கடும் தமிழாக இருக்கிற திருமந்திரத்தை, பரராஜசேகரத்தை வாசித்து விளங்குவதிலேயே இடர்பட வேண்டியிருக்குது.

இந்த நிலையில, திருமந்திரத்தை - பரராஜசேகரத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி கற்பிப்பதென்பது சாத்தியமற்றது.

ஆகையால, எங்கட சித்த மருத்துவத்துறையை தொடர்ந்தும் தமிழில் நடத்த வேணும்.



## சித்த மருத்துவத் துறையை ஆங்கில மயமாக்குவதா?

அப்படி யாரேனும் ஆங்கிலத்திற்கு மாற்ற முற்பட்டால், எங்கட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பதோட, தொடர் போராட்டங்களையும் நடத்த வேணும்.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கோபாவேசத்துடன் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:** சித்த மருத்துவத் துறையை தொடர்ந்தும் தமிழ் மொழியில நடத்துறது எவ்வளவு முக்கியமோ அதுபோல சித்த மருத்துவத்தில பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வழங்குவதும் மிகவும் அவசியம்.

இருந்தும் சித்த மருத்துவர்கள் பலர் வேலை இல்லாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

**விதானையார்:** ஒவ்வொரு பிரதேச சபைகளும் மாநகர சபையும் இதர பட்டின, நகர சபைகளும் தத்தம் பிரதேசங்களில சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளைத் திறக்க வேணும்.

அவ்வாறு திறந்தால், எங்கட மக்கள் சித்த மருத்துவத்தை நாடுவினம்.

இன்றைக்குப் பாருங்க, யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில சனங்கள் குவிந்து நிற்கினம்.

உண்மையில யாழ். போதனா வைத்திய சாலையில குவிகிற மக்களின்ர எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்க வேணும்.

இதே எண்ணிக்கை தொடர்ந்தும் யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்றால், மரணம் இன்னும் அதிகரிக்குமேயன்றி, அதனைக் குறைக்க முடியாது.

இதையேன் சொல்லுறன் எண்டால், யாழ். போதனா வைத்திய சாலையில பணியாற்றுகிறவர்களில கணிசமானவர்கள் தாங்கள் அரச சம்பளத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் எண்ட நினைப்பை மறந்து செயற்படுகினம்.

ஆகையால, யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் செல்வதைத் தவிர்த்து, அவரவர் தத்தம் ஊரில இருக்கிற பிரதேச வைத்தியசாலைகளுக்குச் செல்வதுதான் உத்தமம்.

அதேபோல ஒரு குறிப்பிட்ட வயது வந்திட்டால், சித்த மருத்துவத்தை நாட வேணும். சித்த மருத்துவர்களும் மிகவும் அன்பாகப் பொதுமக்களுடன் நடந்து, தங்களுடைய மருத்துவத்தின் சிறப்பை நிரூபிக்க வேணும்.

இதைவிட்டிட்டு அவர்களும் ஏனோ தானோ எண்டால், சித்த மருத்துவம் எங்களிட்ட இருந்து பிரியாவிடை பெற்று விடும் கவனம்.

**கங்காணி:** விதானையார் சொல்லுவது உண்மை தான். ஆனால் பிரதேச வைத்தியசாலைகளும் சிறப்பாகச் செயற்பட வேணும்.

**மூப்பர்:** பிரதேச வைத்தியசாலைகள் சிறப்பாகச் செயற்படுவதாக இருந்தால், அந்தந்தப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அதில கவனம் செலுத்த வேணும்.

ஆனல் சில பணிப்பாளர்கள் பழி தீர்க்கிறதில கவனம் செலுத்தினமே தவிர, நோயாளர்களுக்குச் சிறந்த மருத்துவ சேவையை வழங்க வேணும் எண்டு நினைக்கிறதில்லை.

இத்தகையவர்களின் கொடுமையால, சேவை மனப்பாங்கு கொண்ட சுகாதாரப் பணிப் பாளர்களும் மனம் நொந்து தாமுண்டு தமது வேலையுண்டு என ஒதுங்கிக் கொள்ளுகினம்.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் எங்கட பிரதேச வைத்தியசாலைகளைத் தரம் உயர்த்த வேணும். அங்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேணும்.

பிரதேச வைத்திய சாலைகளில இருந்து, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிறது எண்ட பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது.

**கங்காணி:** ஓ! யாழ்.போதனா வைத்தியசாலையின்ர மேலதிக சிகிச்சை என்பது மரண விசாரணை தானே.

ஆகையால, மேலதிக சிகிச்சையையும் பிரதேச வைத்தியசாலைகள் வழங்குவதுதான் உத்தமம்.

இவ்வாறு கங்காணி கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே!

அபிமன்யு

மதுரை பாண்டிய மன்னனின் சந்தேகம் தீர்க்கப் போட்டி ஒன்று அறிவிக்கப்படுகிறது. இதில் தருமி என்ற புலவருக்கு உதவும் முகமாக சிவபெருமானினால் அவருக்கு பாடல் எழுதிக் கொடுக்கப்படுகிறது.

அப்பாடலில் பிழை இருக்கிறது என்கிறார் நக்கீரர். இல்லை பிழை ஏதும் இல்லை என்று வாதிடுகிறார் சிவன். நக்கீரர் மறுக்கிறார்.

சிவன் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டித் தான் சிவன் என்பதை நக்கீரருக்கு உணர்த்துகிறார். இப்போது சொல் என் பாட்டில் பிழை இருக்கிறதா? என சிவன் நக்கீரைப் பார்த்துக் கேட்கிறார்.

**"நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே"** என முழுமுதற் கடவுளான சிவனைப் பார்த்து, நீதிவழியைச் சுட்டி நிற்கிறார் நக்கீரர்.

**நீதியின் முன் அனைவரும் சமமே. தவறை யார் செய்தாலும் அது சரியாகி விடாது என்பதையே மேற்குறித்த நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது.**



ஆம், வன்னிப் பெருநிலப்பரவில் நடந்த கொடும் யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதற்குச் சான்றாக பல உண்மை ஆதாரங்கள் வெளிவந்தன. அவை உண்மையான ஆதாரங்களே என பல ஆய்வுகளினூடே உறுதிப்படுத்தப் பட்டுமிருந்தன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்ற மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று சர்வதேசம் இலங்கை ஆட்சியாளர்களைக் கோரியது.

இலங்கை ஆட்சியாளர்களோ இலங்கையில் அவ்வாறான மீறல்கள் எவையும் நடக்கவில்லை என ஒட்டுமொத்த குற்றச்சாட்டுக்களையும் நிராகித்ததுடன், ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் மற்றும் சில அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் நிழலில் மறைந்து கொண்டது.

இங்கேதான் நாம் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். போர் உச்சம் தொட்ட நேரத்தில் அனைத்துப் படையினரும் போர்க் குற்றமீறல்களை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான மீறல்களை மேற்கொண்டவர்களை மாத்திரமே விசாரணை செய்யவும் அவர்களுக்கான தண்டனையை வழங்கவுமே சர்வதேசம் பரிந்துரைக்கின்றது.

ஆயினும் படையினர் அவ்வாறான மீறல்கள் எதையும் செய்யவில்லை என்று அடித்துக்கூறும் அரசு, அவர்களை விசாரணை செய்யவோ, அவர்களுக்கு தண்டனை வழங்கவோ எவருக்கும் அதிகாரம் இல்லை என்று கூறிவருகின்றது.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை மூடிமறைத்து, அவ்வாறான விடயம் எவையும் நடக்கவில்லை எனக் கூறுபவர்களால் எப்படி தமிழினத்துக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்பதே இன்றைய கேள்வி?

இந்நிலையில் கடந்த வாரம் பிரித்தானியா அரசாங்கத்தினால் முன்னாள் இராணுவத்தளபதிகளான ஜெனரல் சவேந்திர சில்வா, ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, கடற்படை அட்மிரல் வசந்த கரண்ணாகொட மற்றும் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதி விநாயகமூர்த்தி முரளிதரன் என அழைக்கப்படும் கருணா அம்மான் ஆகியோக்கு பிரித்தானியாவுக்குள் நுழைவதற்குத் தடை விடுத்துள்ளது.

குறித்த தடையானது கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவதை உறுதி செய்வதாக இந்த முடிவு அமையும்.

இலங்கையில் மனித உரிமைகளை நிலை நாட்ட இங்கிலாந்து அரசு உறுதி பூண்டுள்ளது. கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறுவதை இந்த முடிவு உறுதிப்படுத்தியுள்ளது என பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சு அறிக்கையிட்டுள்ளது.

பிரித்தானியாவின் குறித்த தடைக்கு தெற்கு அரசியல்வாதிகள் பலர் கண்டனம் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான பிரித்தானியாவின் தடை உள்நாட்டு நல்லிணக்க செயன்முறையைப் பாதிக்கும் என வெளிவிவகார அமைச்சர் விஜித கேரத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியும் இலங்கையில் பயங்கரவாத்தை முற்றாக ஒழித்தவன் நான் என்று கூறுபவருமான மகிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில் பிரித்தானியாவின் முடிவு தவறானது. படையினர் விடுதலைப் புலிக்கு எதிராகவே போர் புரிந்தனர். தமிழ் மக்களுக்கு எதிராக போர் புரியவில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

பிரித்தானிய தடை குறித்து விமல் வீரவன்ச தெரிவிக்கையில் முன்னாள் படை வீரர்களுக்கான தடை தீவிரவாதத்தைத் தூண்டும் செயல் என்று தனது வழமையான இன வன்மத்தைக் கக்கியிருக்கின்றார்.

படையினரை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துவற்கான முதற்படியே முன்னாள் இராணுவ அதிகாரிகள் மீதான பயணத்தடை. இவற்றிற்கு அரசாங்கம் அடிபணியக்கூடாது என்று ராவணா பாலய அமைப்பின் பொதுச் செயலாளர் சத்தா திஸ்ஸ தேரர் கொதித்துள்ளார்.

பிரிட்டன் விதித்துள்ள தடை ஒரு தலைப்பட்சமானது. பிரிட்டனின் இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்க வேண்டும் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஆவேசமாகப் பேசியிருக்கிறார்.

இலங்கையில் நடந்த இன அழிப்பிற்கு பலமான ஆதராங்கள் பல இருக்கின்றன. அவற்றை வைத்தே சர்வதேசம் இலங்கை ஆட்சியாளர்கள் இதற்குப் பொறுப்புகூற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வருகின்றது.

ஆனால் தெற்கு பெரும்பான்மை அரசியல்வாதிகளோ இவ்விடயத்தை ஒரு இனத்திற்கு எதிரான பிரச்சினையாகத் திரிபுபடுத்தப் பார்ப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித் தனங்களுக்கு நீதி வழங்காமல் தவறு செய்தவர்களைப் பாதுகாக்க முற்படும் போது, அது சர்வதேச ரீதியில் இலங்கையின் நியாயமற்ற செயற்பாட்டையே வெளிப்படுத்தும்.

இதை முதலில் ஆட்சியாளர்களும் தெற்கு அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தப் பாதிப்புக்கான நீதியைப் பெற்றுத்தராமல் தங்கத்தட்டில் பாற்சோறு கொடுத்தாலும் அதில் பயன் ஏதும் ஆகிவிடப்போவதில்லை.

தெற்கு அரசியல்வாதிகள், தமிழ் மக்களும் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதை ஏற்றுக் கொண்டு இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் மீது நடத்தப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத் தர முன்வரவேண்டும்.

இதுவே, தமிழ் மக்களினால் பெரும்பான்மை சிங்கள மக்கள் மீது இவ்வாறான அத்துமீறல்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்தால், அப்போது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை மனச்சாட்சியுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பு கூறியது போல, **"நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே"** என்று நக்கீரர் கூறியதை மீண்டும் இவ்விடத்தில் ஞாபகமூட்டுவதுடன் இப்பத்தி முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கிஷக் கவிதை

08.09.1935 ஆம் ஆண்டு
ஈழத்தில் இருந்து வெளிவந்த **"ஈழகேசரி"**
வார இதழில் வெளிவந்த கவிதை

## வந்தனை செய்து வழியொன்று தேடீர்!

**பொ**ன்னொடு
மாதரை மற்றிப் - புன்மைப்
பூமியை யேயின்பப் பொக்கிஷ மென்று
தன்னல மாதிய கொண்டு - இங்கு
சம்பாத்தி யஞ்செய் தவனருள் விண்டு

துன்னும் பலபிணி யாலே - மிகச்
சூழப்பட் டேவெகு துன்ப முழன்று
இன்னும் பலபிறப் பெய்த - நன்கு
ஏற்றவ ராயிங் கிருப்பவர் கேண்மின்!

பொன்னதி யாமுங்க ளின்பம் - தன்னைப்
போட்டுவைத் தானந்தப் புண்ணிய மூர்த்தி
அன்னவ னேபெரு மின்பம் - என்ன
தாமோதி யாவழி யாதிங்கு சொல்லீர்

பாரிய வின்ப மிருக்க - அதைப்
பற்றிச்செல் லப்பல பாதை யிருக்க
நாரியர் சிற்றின்பம் நாளும் - நீவிர்
கச்சி யிருத்தல் நலமன்று கேளும்

நீர்மேற் குமிழியித் தேகம் - இது
நில்லாது போவதும் நிச்சய மாகும்
பாரிற் பலவழி யாலும் - இதைப்
பாதுகாக் கப்படும் பாடவ மாகும்

காதன் மனைமக்க ளேனும் - நீங்கள்
காவல் புரிந்திடுங் காசுக ளேனும்
போத மறியாத நீவிர் - பின்பு
போம்வழிக் குங்கள் புறத்தே வராவே

தேடிநீர் பூட்டிய வாக்கர் - தன்னைத்
திறந்தித்த நேரத்திற் சிரிய தாக்கும்
ஆடிய வண்ணலை யுங்கள் - தீய
ஆணவம் போக வகத்தி னினைத்து

அன்னாங்கொள் சத்திர மாதி - யாக
அறிவுடை யோர்சொல் லறங்களை யாற்றிப்
பின்னாங்க ளேபெறும் பேறாய்-வரும்.
பிறப்பெனும் பேயைப் பிடித்தடித் தோட்டி

முன்னம் முந்தியவர் போன - மோன
முத்தி யெனுந்தலம் சித்திக்க வேண்டிக்
கன்னலும் பாகும் கலந்த - சுவைக் கட்டியொ
டேமுக் கனிரச மென்னும்

செந்தமிழ்த் தாய்தந்த செல்வீர்! அந்தச்
செந்தமற் கையன் றிருப்பாத முங்கள்
சிந்தையிற் சேர்த்தன்பி னோடீர் - தாலம்
வந்தனை செய்து வழியொன்று தேடீர்.

**நயினை, திரு. ஆ. இராமுப்பிள்ளை**

# அன்னையே கண்கண்ட தெய்வம்



**உ**யிர் தந்து உடல் தந்த
உன்னதமே தாயே - என்
உணர்வெல்லாம் நிறைந்தே
என் உயிர் காப்பாய் நீயே
பயிர்போல நான் வளர பாச மழை பொழிந்தே
பரிவுடனே வளர்த்தெடுத்த பைந்தமிழின் வடிவே

ஈ கூட உன் சேயை தீண்டாது காப்பாய் - கண்
இமை கூட உன் அன்புக் காப்பரணை தோற்கும்
தாயாக நான் கண்ட பேரன்பின் பொய்கை - செந்
தமிழாலே சொன்னாலும் தகுமோ உன் செய்கை

தாலாட்டி சீராட்டி தோள் மீது வைத்து
தண்ணொளி வெண்ணிலா காட்டி
உண்ண உணவூட்டி
நூலோரின் ஒரு கோடி பாடல்கள் இசைத்து
நுண்ணறிவுத் திறனாலே வண்ணமுற வளர்த்தாய்

என் தாயே உன்னைப் போற்றி எந்நாளும்
துதிப்பேன் - நீ
என்றென்றும் வாழ்கவென
இயற்கையினை விதிப்பேன்
பொன்பொருள்கள் செல்வங்கள்
பெரிதாமோ அம்மா - உன்
பொன்னடியை வணங்காது வாழ்வேனா சும்மா

என் பசியை பொறுக்காது இதயம் மிக நொந்து
எத்தனை உண்பண்டங்கள் புத்தமுதாய் செய்து
உண்ண உண்ண தெவிட்டாது
ஊட்டி வளர்த்தாயே
உனையன்றி தெய்வம் வேறுண்டோ என் தாயே.

**ஆனையூர்க் கவிராயர்**

# கவிதைக் கலசம்




## மழை

**அ**ந்திப் பட்டு வானிலே
அன்று மேக ஊர்வலம்
அந்த ஊர்வ லத்திலே
அக்கினிதான் மின்னுறான்

பின் தொடர்ந்து வந்தவர்
முரச றைந்து செல்கிறார்
தந்த னத்தோம் தாமென
தாள லயம் கேட்குதே

என்ன விந்தை விந்தையோ
சூரியனை காணலை
அண்ணா வந்து பாரடா
ஆனதென்ன கூறடா

வானம் மீது வில்லென
வந்து நிற்ப தேதடா
ஆஹா என்ன அற்புதம்
அங்கு மழை பெய்யுதே



**சத்தியலிங்கம் சனுசியா**
**(தனிமையின் காதலி),**
**கிழக்கு பல்கலைக்கழகம்.**

# செத்தவீட்டு பட்டாசு



**ஒ**ரு சடலம்
உலா வருகிறது
முன்னறிவிப்புச் செய்கிறது
பட்டாசுச் சத்தம்

முன்னால் போவோரின்
மூச்சடைக்க வைக்கிறது
பின்னால் வருவோரின்
செவிப்பறை கிழிகிறது

கவலையோடு நடப்பவனின்
காலின் கீழும் வெடிக்கிறது
சத்தத்தின் அதிர்வில்
வந்த கண்ணீர் அடைக்கிறது

விரல்களில் வெடியைப் பிடித்து
வித்தை காட்டுகிறான் சின்னவன்
சவ ஊர்வலத்தில்
சாதித்த திருப்தி அவனுக்கு

வீதியில் குவிந்த வெடிகளால்
வீதி வெடி வெள்ளத்தில்
உணவுக் கடையுள்ளும்
உட்புகும் புகை

வெடிக்க வைத்து கவலைகளை
வீசிவிடும் உத்தி இதுவாம்.

நிறைய வெடி கொளுத்திய
நிம்மதி சிலருக்கு

சூழல் காப்பாளனின்
இறுதி ஊர்வலம்
சுற்றிலும் பட்டாசு எச்சங்கள்
அவனின் அகவுணர்வை
தடுக்கின்றன பட்டாசுச் சத்தங்கள்.

**யோ. புரட்சி**

அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்கு நாதத்தில் நீங்களும் எழுதலாம்....

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்திய- இலங்கை மீனவர்களின் எல்லைப் பிரச்சினை தீருமா வியாசரே?

அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்



இளம் சந்ததியினர் இப்போது வழிமாறி ஒழுக்கமற்றுத் திரிவதன் காரணம் என்ன வியாசரே?

**வியாசரை விண்வெளிக்கு அனுப்பலாம் என்று விரும்புகிறேன். தங்கள் முடிவு?**

*சிவம்-வடமராட்சி*

நான் விண்வெளியிலை மிதப்பதைப் பார்க்க சிவத்துக்கு அவ்வளவு ஆசையோ? இல்லை இங்க இருந்தால் பதில் சொல்லியே நம்மளை அறுப்பான்.

அதனால் ஆளை அனுப்பி விடுவம் என்கிற பேராசையோ?

**நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். எங்கள் காதலை அவள் அண்ணனிடம் கூறலாம் என்று நினைக்கிறேன் வியாசரே?**

*தனுசன்-ஓமந்தை*

கூறலாமே. சிறப்பாகக் கூறலாம். ஒரு சிறு விண்ணப்பம். எதற்கும் தலைக் கவசத்தை அணிந்து செல்வது சேப்ரி. மண்டை பத்திரம்.

**இளம் சந்ததியினர் இப்போது வழிமாறி ஒழுக்கமற்றுத் திரிவதன் காரணம் என்ன வியாசரே?**

*சி.மகாலட்சுமி-கொக்குவில்*

தொலைபேசி என்றைக்கு நம் வாழ்வில் ஒட்டிக் கொண்டதோ அன்றே சொந்த-பந்தம், அன்பு-பாசம் என்பன தூரச் சென்று விட்டன.

தொலைவில் இருப்பவர்களைத் தொடர்பு கொள்ளக் கண்டுபிடித்த தொலைபேசி அருகில் இருப்பவர்களைத் தள்ளி வைக்கச் செய்து விட்டது தான் வேதனை.

ஐந்து நிமிடத்துக்கு ஒரு தடவையேனும் தொலைபேசியை நோண்டாமல் மனிதனால் இருக்க முடியாத நிலை தற்போது வந்து விட்டது.

ஒரு மனிதனைச் சீரழிக்கும் அத்தனை விடயங்களும் தொலைபேசிக்குள் இருக்கிறது. அதற்கு மனிதன் அடிமையாகிக் கிடக்கிறான் எனின், பாதை மாறிய பயணங்கள் இன்னும் என்ன கொடுமைகளைச் செய்யப் போகிறதோ?

**வாழ்க்கை போர் அடித்து விட்டதே வியாசரே?**

*ரதீஸ்-யாழ்.நகர்*

ரதீஸ், எமக்குக் கிடைத்த வாழ்க்கை என்பது நல்ல வாழ்க்கை தான். ஆனால் எமக்குத்தான் அதை நல்லபடியாக எடுத்துச் செல்ல தெரியவில்லை.

இதில் வாழ்வைச் சொல்லிக் குற்றம் ஏதும் இல்லை. நம்மில் தான் அனைத்துக் குற்றங்களும் உண்டு.

**பரீட்சை தொடர்பில் தங்களின் கருத்து என்ன வியாசரே?**

*நிதுஷ்-வதிரி*

என்னைப் பொறுத்தவரை பரீட்சை என்பது அறிவைச் சோதிப்பது அல்ல. ஞாபக சக்தியைச் சோதிப்பதே.

இதைக் கூறும் போது பலருக்கு கோபம் வரும். வந்து என்ன செய்ய. அதுதானே உண்மை.




**இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்படுமா வியாசரே?**

*ஜெயக்குமார்-முகமாலை*

தற்போது அதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பது உறுதி. ஏனெனில் பாரிய புரட்சியை ஏற்படுத்தி அதனூடே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் தற்போதைய அரசியலில் இல்லை என்பதுதான் உண்மை.

தேசிய மக்கள் சக்தியிடம் மக்கள் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் பயணம் எப்படிப் போகும் என்பதை பொறுத்திருந்து தானே பார்க்க வேண்டும்.

எத்தனை காலங்களாக ஏமாற்றப்பட்ட மக்களின் மனநிலையில் இப்போதே மாற்றம் தோன்றியது. அந்த மாற்றத்தை மாற்ற முயலும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசு நடந்து கொள்ள வேண்டும். இதையே மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

**போர்க்குற்ற மீறல்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரிட்டன் வழங்கியுள்ள பயணத்தடை பற்றி?**

*சுதன்-குப்பிழான்*

ஒருவர் தவறு செய்திருக்கிறார் எனின் அது தொடர்பில் ஆராய வேண்டும். விசாரணைகளைத் தீவிரமாக்கி அவர் தவறு செய்தாரா?, இல்லையா? என்பதை நிரூபிக்க வேண்டும்.

இதை விட்டு விட்டு அவரை எமக்கு நன்கு தெரியும் அவர் தவறு செய்திருக்க மாட்டார் என்று கூறுவது பாதிக்கப்பட்ட மக்களை வஞ்சிக்கும் செயல்.

பிரிட்டனின் முடிவு தவறானது என்பதை இலங்கை ஆட்சியாளர்களால் நிரூபிக்க முடியுமா? அப்படி நிரூபிக்க முடிந்தால் நன்று.

இதை விடுத்து அவர்கள் பயங்கரவாதத்தை அழித்தவர்கள். அவர்களை எங்களால் காட்டிக் கொடுக்க முடியாது என்று கூறுவது ஒருநாளும் அறமாகாது.

**இந்திய- இலங்கை மீனவர்களின் எல்லைப் பிரச்சினை தீருமா வியாசரே?**

*தவராஜன்-கொற்றாவத்தை*

இலங்கை-இந்திய கடல் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது ஒரு பெரிய விடயமே இல்லை. இதை ஏன் தீர்க்கிறார்கள் இல்லை என்பது தான் இன்றைய கேள்வி.

இந்தியா தெற்காசியாவின் வல்லரசு. அதிநவீன கருவிகள், படைப்பலம் என்பன இந்தியாவிடம் நிறையவே உண்டு.

இவற்றை வைத்து இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் புகாதபடி பார்த்துக் கொள்வது ஒரு சிறிய விடயமே.

இதுபோல இலங்கை கடற்படை மிகப் பலமானது. எல்லையைக் கண்காணிப்பது அவர்களுக்கு சிரமமான வேலையல்ல. ஆயினும் எல்லைக்குள் வராமல் தடுப்பதைத் தவிர்த்து உள்ளே வந்தவுடன் நடவடிக்கை எடுப்பது பயனற்றது. இவை அரசியல் நாடகங்கள் என்ற கருத்துக்களும் உண்டு.

**வியாசரின் தத்துவம் கேட்டு பல நாள் ஆகிவிட்டதே?**

*இந்து-வதிரி*

அம்மாவின் புடவைகள், நகைகள், சமையல் பாத்திரங்கள் அனைத்தும் மகளைச் சென்றடையும்.

ஆனால் அப்பாவின் கடன் மாத்திரமே மகனைச் சென்றடையும்.

அவன் தான் வாழ்க்கை முழுவதும் அந்தக் கடனை அடைப்பதற்காக உழைத்து ஓடாய்த் தேய்ந்து போய் விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: கருப்புப் பணம்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வாநாதன்,
டி.கே. ராமமூர்த்தி
பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்



எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்

இருட்டில் மறைந்து கொள்ள விளக்கணைப்பார் – சிலர்
கிணற்றில் இருந்து கொண்டு உலகளப்பார்
இருட்டில் மறைந்து கொள்ள விளக்கணைப்பார் – சிலர்
கிணற்றில் இருந்து கொண்டு உலகளப்பார்
நெருப்பை மடியில் வைத்து மறைத்திருப்பார் – அந்த
நீசரை யார் உலகில் பொறுத்திருப்பார்
நெருப்பை மடியில் வைத்து மறைத்திருப்பார் – அந்த
நீசரை யார் உலகில் பொறுத்திருப்பார்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்

பாலென அழுவோர்க்குப் பால் தருவோம் – பசுங்
கூழெனத் துடிப்போர்க்கு சோறிடுவோம்
பாலென அழுவோர்க்குப் பால் தருவோம் – பசுங்
கூழெனத் துடிப்போர்க்கு சோறிடுவோம்
தாயகம் காப்போரின் தாள் பணிவோம் – யாவும்
தனக்கென நினைப்போரை சிறையிடுவோம்
தாயகம் காப்போரின் தாள் பணிவோம் – யாவும்
தனக்கென நினைப்போரை சிறையிடுவோம்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை
எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்

# IPL : அதிக முறை ஆரஞ்சு தொப்பி எடுத்தவர்கள்

ஐ.பி.எல் கிரிக்கெட் திருவிழா கடந்த 22ஆம் திகதி தொடங்கியது. இந்த ஐ.பி.எல் சீசனில் அதிக ரன்கள் அடித்த வீரருக்கு வழங்கப்படும் ஆரஞ்சு நிற தொப்பியை, கடந்த 10 சீசன்களில் யார் யார் வென்றார்கள், அதில் யார் அதிமுறை ஆரஞ்சு நிற தொப்பி வென்றார்கள் என்பதைப் பார்க்கலாம்.

### 2015 - டேவிட் வார்னர்

இந்த சீசனில் கோப்பையை வென்றது மும்பை அணியாக இருந்தாலும், ஆரஞ்சு கேப் வென்றது டேவிட் வார்னர். மொத்தமாக 562 ரன்கள் குவித்து முதல் முறையாக ஆரஞ்சு கேப் வென்ற டேவிட் வார்னர்.

### 2016 - விராட் கோலி

ஐ.பி.எல் ரசிகர்கள் யாராலும் அவ்வளவு எளிதில் மறக்க முடியாத சீசன் இது. காரணம், ஐ.பி.எல் வரலாற்றில் இதுவரை யாரும் செய்யாத சாதனையாக ஒரே சீசனில் 4 சதங்களுடன் மொத்தமாக 973 ரன்கள் குவித்தார் விராட் கோலி. ஒரே சீசனில் அதிக சதம் அடித்ததும் சரி, ஒரே சீசனில் இவ்வளவு ரன்கள் அடித்ததும் சரி இன்றுவரையில் யாராலும் முறியடிக்க முடியாத சாதனையாக இருக்கிறது. இத்தகைய சாதனையுடன் முதல்முறையாக ஆரஞ்சு கேப் வென்றார் கோலி. ஆனாலும், இறுதிப்போட்டியில் 8 ரன்கள் வித்தியாசத்தில் ஐதராபாத் அணியிடம் தோல்வியைத் தழுவி சம்பியன் பட்டத்தை நழுவவிட்டது பெங்களூரு அணி.

### 2017 - டேவிட் வார்னர்

இந்த சீசனில் 14 போட்டிகளில் 641 ரன்கள் குவித்து இரண்டாவது முறையாக ஆரஞ்சு கேப் வென்றார். இதில், ஒற்றுமை என்ன வென்றால், வார்னர் முதல்முறையாக ஆரஞ்சு கேப் வென்ற சீசனில் சம்பியன் பட்டம் வென்ற மும்பை அணி தான் இம் முறையும் சம்பியன் பட்டம் வென்றது.

### 2018 - கேன் வில்லியம்சன்

இந்த சீசனில் ஐதராபாத் அணிக்கு தலைமையேற்று இறுதிப்போட்டிவரை கொண்டு சென்ற கேன் வில்லியம்சன், 735 ரன்கள் குவித்து ஐ.பி.எல் வரலாற்றில் முதல் நியூசிலாந்து வீரராக ஆரஞ்சு கேப் வென்றார்.

### 2019 - டேவிட் வார்னர்

இந்த சீசனில் 12 போட்டிகளில் 692 ரன்கள் அடித்த வார்னர் மூன்றாவது முறையாக ஆரஞ்சு கேப் வென்றார்.

### 2020 - கே.எல்.ராகுல்

இந்த சீசனில் ஒற்றை ஆளாக பஞ்சாப் அணியின் வெற்றிக்காக போராடிக் கொண்டிருந்த கப்டன் கே.எல்.ராகுல், 670 ரன்கள் குவித்து முதன்முறையாக ஆரஞ்சு கேப் வென்றார்.

### 2021 - ருத்துராஜ் கெய்க்வாட்

ஐ.பி.எல் வரலாற்றில் முதல்முறையாக, சம்பியன் பட்டம் வென்ற அணியின் வீரரே ஆரஞ்சு கேப் வெல்வது இந்த சீசனில் நிகழ்ந்தது. சென்னை அணி நான்காவது முறையாகச் சம்பியன் பட்டம் வெல்ல, 635 ரன்களுடன் முதல்முறையாக ஆரஞ்சு கேப் வென்றார் ருத்துராஜ் கெய்க்வாட்.

### 2022 - ஜாஸ் பட்லர்

இந்த சீசனில் ராஜஸ்தான் றோயல் அணியில் அதிரடி வீரராக ஜொலித்த ஜாஸ் பட்லர், 863 ரன்கள் குவித்து ஆரஞ்சு கேப் வென்றார். இந்த சீசனில்தான் 2008இற்குப் பிறகு முதல்முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னே றியது ராஜஸ்தான் அணி.

### 2023 - சுப்மன் கில்

2022இல் அறிமுகமான முதல் சீசனிலேயே சம்பியன் பட்டம் வென்று அசத்திய குஜராத் அணி, இந்த சீசனிலும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆனால், இறுதிப் போட்டியில் சென்னை அணி கோப்பையைத் தட்டிச் சென்றது. இருப்பினும், குஜராத் வீரர் சுப்மன் கில் 890 ரன்களுடன் ஆரஞ்சு கேப் வென்றார்.


### 2024 - விராட் கோலி

இந்த சீசனில் முதல் பாதி முடிவில் இனி பிளே-ஆஃப் சுற்றுக்கு முன்னேறுவதெற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்ற நிலையிலிருந்த பெங்களூரு அணி, இரண்டாம் பாதியில் அபாரமாக ஆடி பிளே-ஆஃப் சுற்றுக்கு முன்னேறியது. 741 ரன்களுடன் இரண்டாவது முறையாக ஆரஞ்சு கேப் வென்றார் விராட் கோலி. இதற்கு முந்தைய சீசன்களில், ஷான் மார்ஷ் (2008), மேத்யூ ஹைடன் (2009), சச்சின் டெண்டுல்கர் (2010), கிறிஸ் கெயில் (2011, 2012), மைக்கல் ஹஸ்ஸி (2013), ராபின் உத்தப்பா (2014) ஆகியோர் ஆரஞ்சு கேப் வென்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை மீறும் சமூக வலைத்தளப் பாவனைகள்



நவீன யுகத்தில் நாளுக்கு நாள் நாகரிகம் எனும் போர்வைக் குள் பழக்கப்பட்டிருக்கும் இன்றைய சமூகம் என்று சொல்வதை விட அடிமையாகியுள்ளார்கள் என்றுதான் சொல்லவேண்டும். சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது முற்றுமுழுதான தவறென்பதை விட அவற்றினைச் சாதகமாகவும் பாதகமாகவும் பயன்படுத்துவது என்பது ஒவ்வொரு தனிமனிதனின் மனப்பக்கு வத்தில்தான் உள்ளது.

இன்றைய எமது அன்றாட வாழ்நா ளையே சமூக வலைத்தளமே படம்பிடித்து காட்டுமளவுக்கு காலம் மாறிவிட்டது. பிறந்த குழந்தையிலிருந்து சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியோர்கள் என தொலைபேசிப் பாவனை மேலோங்கி காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் "ஆராரோ" பாடி குழந்தையைத் தூங்க வைத்த காலம் கடந்து தற்காலத்தில் தொலைபேசியில் பாட்டைப் போட்டு விட்டு சீரியல் பார்க்கிற சீக்கிரமான காலமாக மாறிபோட்டுது. நிலாவைக் காட்டி சோறு ஊட்டிய பெற்றோர் தற்காலத்தில் போனைக்காட்டி சோறு ஊட்டுகிறார்கள். குழந்தையும் அதற்காகத்தான் அடம்பிடிக்கும் மோசமான காலமாகவும், சவால் நிறைந்த வாழ்வாகவும் இருக்கிறது. இவற்றுக்குப் பல காரணங்கள் உள்ளன. அதாவது போர் தந்த எச்சங்கள், வடுக்கள், வலிகள், இழப்புக்கள், போதைப் பாவனைகள், தனிமனித நடத்தைகள் என்று பலதரப்பட்ட காரணங்களை எடுத்துக்கூறலாம். மோசமான துரதிஷ்டத்தின் நடுவே மகிழ்ச்சி தரும் மாற்றத்திற்கான வழி கிடைக்க வேண்டுமானால் நல்ல எண்ணங்களை, நல்ல தெரிவுகளை, நல்ல திறன்களை எம்மிடையே வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய இளைஞர்கள், யுவதிகள் முகநூல், ரிக்ரொக் போன்ற வலைத்தளங்களைப் பயன்படுத்தி தேவையற்ற கருத்துப் பகிர்வுகள், தங்கள் பித்தலாட்டங்கள், பேயாட்டங்களைப் போட்டு தங்களையே அழித்து கொள்கின்றார்கள். சட்டங்கள் சம்பிர தாயங்கள் எல்லாம் இருந்தும் எம் சமூகமிடையே மனமாற்றம் என்பது இல்லவே இல்லை. அரசாங்கம் பதினெட்டு வயதிற்கு பிறகுதான் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது போல சமூக வலைத்தள பாவனைக்கும் இளம் சமூகமிடையே கடுமையான சட்டத்தை உருவாக்க வேண்டும். கூத்தாடுவதும், உடல் நெழிப் பதும் ஆத்தாதவன் செயல் என்பது போல அலங்கோலப்பட்டு - அவஸ்தைப்படுவதேன். எங்கள் மக்கள் எத்தனையோ துயரங் களை, துன்பங்களை கடந்து வந்தவர்கள். அவற்றை நாம் ஓரளவேனும் சிந்தித்து செயற்படல் வேண்டும். பிறப்பு தொடக்கம் இறப்பு வரையும் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை உங்கள் நடவடிக்கைகள் வலைத்தளங்களில் உலா வரவேண்டும் என ஆசைப்படகிறவர்களே அதிகம். எதற்காக எமது கலாசாரத்தை, விழுமியங்களை விட்டெறிந்து அடையாளங்களை அழித்தொழித்து செயலற்று, உயிரற்றுப் போவது ஏனோ? வருமானமா அல்லது பொழுதுபோக்கிற்காக பயன்படுத்துவது என்றால் அவற்றினை தேடிப்பெறுவதற்கும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் நல்ல பயன்மிக்க வாசிப்பு, ஆன்மிக செயற்பாடுகளைப் பின்பற்றுங்கள். அதற்காக சமூக வலைத்தளங்களில் தேவையற்று ஊசலாடி உங்களுக்கு இறைவன் அளித்த அற்புதப் பிறவியினை அழித்துக்கொள்ளா தீர்கள். சமீப காலமாக வலைத்தளங்களில் கருத்து மோதல்கள் காட்டாறு போல் கட்டுங்கடாங்காமல் போவது நாம் அறிந்த விடயமே. வாழ்வுக்கு வார்த்தைகளே ஆயுதம் என்பதும் ஒரு கருத்து; இதனால் அவமானங்களையும் மன உளைச்சல் களையும் ஏற்காது "இருக்குமிடத்தில் இருந்துவிட்டால் எல்லாம் சௌக்கியம்" என்பது போல எப்போதும் மற்றவர்களையும் மகிழ் வித்து மகிழ்ச்சியாக வாழலாம்.

**சசி சுயா, பருத்தித்துறை, கிராமக்கோர்டு.**

# ஆச்சி அறிவுரை

## பிள்ளைகளை விளையாட விடுங்கோ!



## பேராண்டி...

உனக்கொரு குட்டிக்கதை சொல்லுறன். தரம் 5 படிக்கிற பிள்ளை ஒண்டு வீட்டிலை சாப்பாட்டு மேசையிலை சாப்பிடப் போய் இருக்குது.

மேசையில் இருந்த கண்ணாடிக்கிளாஸ் தவறுதலாக தட்டுப்பட்டு கீழே விழுந்து உடைஞ்சிட்டுது. கிளாஸ் உடைஞ்ச சத்தம் கேட்ட அம்மா பதைச்சுப் போய் ஓடி வந்து பார்க்கிறார்.

**அம்மா 1 :** டேய் உனக்கு அறிவு இருக்கா? கிளாஸ் மேசையிலை இருக்கிறது கண்ணுக்குத் தெரியலையோ? அதின்ர விலை என்னவெண்று உனக்குத் தெரியுமோ? மாடு மாதிரி போய் கதிரையிலை இருந்தா இப்படி உடையாமல் வேற என்ன செய்யும்?

உடைஞ்ச கிளாஸை பொறுக்கிற வேலையை யார் செய்யிறது. எனக்கு கெட்ட கோபம்தான் வருது. இதிலை நிக்காமல் அங்காலை போயிடு. இல்லாட்டி அடிதான்விழும்.

பிள்ளை பயத்தில் நடுங்கியவாறு அந்த இடத்திலேயே சிலையாக நிண்டது.

இதே, கிளாஸ் உடையிற நிகழ்வு வேறு ஒரு வீட்டிலையும் நடக்குது.

**அம்மா 2 :** தம்பி என்ன சத்தம் கேட்டது? கிளாஸ் உடைந்ததைப் பார்க்கிறாள் தாய். மகன் பயத்தில் உறைந்து நிற்பதையும் பார்க்கிறாள்? தம்பி கிளாஸ் விழுந்து உடைஞ்சு போட்டுதோ? கவனம். உடைஞ்ச பிசுங் கான்கள் காலில குத்திப்போடும். மெல்ல இங்கால வாங்கோ. தம்பி, எந்த விசயத்திலும் நாங்கள் அவதானமாக இருக்கவேணும். உடைஞ்ச கிளாசை அம்மாவும் பிள்ளையும் மெல்ல மெல்ல எடுப்பம். இனிமேல் அவதானமாக இருக்கவேணும்.

பேராண்டி, இந்த இரண்டு அம்மாவிலையும் உனக்கு எந்த அம்மா வைப் பிடிக்கும்? ஓம்... இரண்டாவது அம்மாவைத்தான் உனக்குப் பிடிக்கும் எண்டு எனக்கு நல்லாத் தெரியும்.

இப்ப எங்கட பெற்றோருக்கு பிள்ளை வளர்க்கத் தெரியாது. பிள்ளை படிக்கவேணும். படிச்சு டொக்டர், இஞ்சினியராக வரவேணும் எண்டு கனவு காணுகினம். தங்கட கனவை நனவாக்க பிஞ்சுப் பிள்ளையளின்ர மனசை அறியாமல் அதுகளை வாட்டி வதைக்கினம். இதுகள் பிள்ளைகளின்ர ஆழ் மனதிலை ஆழமாப் பதிஞ்சு, பிற்காலத்திலை வன்மம் நிறைஞ்ச பிள்ளையாளா வளருதுகள்.

காலை 5 மணியிலை இருந்து இரவு 9 மணிவரையும் படி, படி எண்டு பிள்ளைக்கு கரைச்சல் கொடுத்தால், அதுகளால படிக்க முடியுமோ?

பிள்ளைகளுக்கு வாழ்க்கையின்ற நல்லது கெட்டதுகளைச் சொல்லிக் கொடுக்கவேணும். அதுக்கு பிள்ளைகளோட நேரம் செலவிடவேணும். அவையோட அன்பா கதைச்சு சிரிக்கவேணும்.

இதென்னெண்டா, ஒரு கொஞ்ச நேரமும் பிள்ளைகளை சும்மா இருக்கவிடாமல் படிக்கச் சொல்லி கலைக்கிறது. அதுகளின்ர மனம் இறுகி அதுகள் பாதை மாறிப்போகிறதுக்கு நாங்களே காரணமாகிறம். பிறகு பிள்ளை வழி தவறிப் போயிட்டுது எண்டு புலம்பிப் பயன் என்ன?

சின்னப் பிள்ளைகளுக்கு விளையாட்டின் மூலம் கல்விதான் சரியான கல்வி முறை.

பிள்ளைகள் கல்வியை கற்க ஆதரவா எத்தின விளையாட்டுக்கள் இருக்குது எண்டு உனக்குத் தெரியுமோ பேராண்டி.

அந்த விளையாட்டுக்களை அரங்க விளையாட்டுகள் எண்டு சொல்லு றது. அதுகளிலை பிள்ளைகளை ஈடுபடுத்த, பிள்ளைகள் விளையாடி மனதை இலகுபடுத்துறதோட கல்வி கற்கிற மனநிலையும் உருவாகும்.

அண்டைக்கும் உன்ர கொம்மாட்டை இதைத்தான் சொன்னனான், கொம்மா அதிலை நல்ல தெளிவா இருக்கிறாள். உன்ர எதிர்காலம் நல்லா வரவேணும் எண்டு அவளுக்கு விருப்பம்.

இப்பிடி எல்லா பெற்றாருக்கும் விரும்பினால் பிள்ளைகள் ஏன் தடம் மாறிப்போகுதுகள்...?

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடன் என்றும் மாய வலை

இன்றைய காலக்கட்டத்தில் கடன் இல்லா வாழ்க்கை என்பது பலருக்கும் முக்கியக் கனவு. சொல்லப்போனால், கடன் இல்லாமல் நிம்மதியாக இருக்க வேண்டும். இருக்கும் கடனை முடித்துவிட்டு, இனி கடன் வாங்கவே கூடாது என்று நினைப்போம்.

ஆனால் இருக்கிற கடன் முடிவதற்குள்ளேயே, அடுத்த பொருளாதாரப் பிரச்சினை வந்துவிடும். வேறு வழியில்லாமல் புதுக் கடன் வாங்குவோம். இன்னும் சிலர், ஒருவரிடம் கடன் வாங்கி, வேறு ஒருவரின் கடனை அடைப்பர். அந்தக் கடனை அடைக்க மற்றொரு இடத்தில் கடன் வாங்குவர். இப்படி சங்கிலித் தொடராக கடன் தொடர்ந்து கொண்டிருக்கும். ஏதேனும் ஓர் இடத்தில் கடனை கட்ட முடியாமல் நிற்கும் போது, வாழ்க்கை முழுவதும் கடன் எனும் மாய வலையில் சிக்கிக்கொண்டு, அதிலிருந்து முழுவதும் வெளியே வரமுடியாமல் தவிப்போம்.

சிலர், அடுத்த ஆண்டில் சம்பளம் அதிகரிக்கும், அதை வைத்து கடனை எளிதாக அடைத்துக் கொள்ளலாம், முதலீடும் செய்யலாம் என நினைப்பார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், எவ்வளவுதான் சம்பாதித்தாலும், கடன் இருந்தால், பணத்தை மிச்சப்படுத்த முடியாது. மாறாக, கடனும் வளர்ந்துகொண்டேதான் செல்லும்.

அவசியத் தேவைகளுக்குக் கடன் வாங்குவது போய், இன்றைய காலத்தில் எடுத்ததற்கெல்லாம் கடன் வாங்கும் நிலையில் பலரும் இருக்கின்றனர். இது ஒரு தொற்று வியாதி போல் ஆகிவிட்டது.

தகுதிக்கு மீறி செலவு செய்யும் மக்களின் இந்த மனநிலை, இன்று தோன்றியதல்ல, தொன்றுதொட்டு உள்ளதுதான். அதனால் தான், சங்ககாலப் புலவர் ஔவையார் அப்போதே இதைப் பற்றித் தன் பாடல் ஒன்றில் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

**“ஆன முதலில் அதிகம் செலவானால்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு”**

இந்தப் பாடலின் அர்த்தம், வரவுக்கு மேல் செலவு செய்பவர்களின் மானம், மரியாதை எல்லாம் அழிந்து போகும். சொந்த அறிவை இழந்து, அடுத்து என்ன செய்வது எனத் தெரியாத சூழல் ஏற்படும். சென்ற இடங்களில் எல்லாம் தவறான பெயரை வாங்கி, திருடனை போன்ற ஓர் இழிவு நிலை ஏற்படும் என்பதாகும்.

சரி, கடனை ஏன் தவிர்க்க வேண்டும் என்பதற்கான முக்கிய காரணங்களை இங்கே பார்ப்போம்.

**1. அடிமைத்தனம்..!**

கடன் வாங்கிவிட்டாலே, அடிமைத்தனம் என்பது நம்மையும் அறியாமல் வந்துவிடும். கடன் வாங்கி விட்டோமே, எப்படியாவது கடனைத் தொடர்ந்து சரியாகச் செலுத்த வேண்டுமே, வேலையில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமே எனப் போராடுவோம். இதிலேயே சிக்கிக்கொண்டு, வாழ்வில் அடுத்தகட்ட முன்னேற்றத்தைப் பற்றி யோசிக்க மாட்டோம்.

**2. வட்டிக்குச் செல்லும் சம்பாத்தியம்..!**

சுலபமாகக் கிடைக்கும் தனிநபர் கடன்கள் மற்றும் கிரெடிட் கார்டுகள் மூலம் கடன் பெறுபவர்கள் பலர் கந்து வட்டி, மீட்டர் வட்டி, மின்னல் வட்டி என அநியாயத்துக்கு கடன் வாங்கி ஆயுளுக்கும் வட்டி கட்டி வருவார்கள். ஆக, கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதி இப்படி வட்டிக்கே சரியாகி விடும்.

**3. பறிபோகும் நிம்மதி..!**

கண் கெட்ட பின்னரே சூர்ய நமஸ்காரம் என்பது போல, கடன் வாங்கியவர்களில் பலர் கடனுக்கு ஆட்பட்ட பின்னரே உணரும் உண்மை ஒன்று உள்ளது. அது, கடன் என்பதை வாங்கி விட்டால்... வாங்கியவர் மற்றும் அவர் குடும்பத்தின் நிம்மதி பறிபோய்விடும்.

மொத்தத்தில், வாழ்க்கை முழுவதும் கடன் என்னும் மோசமான வலையில் சிக்கி, வாழ்க்கையை வாழ முடியாமலே போய்விடும். ஆக, ஆசைக்காக கடன் வாங்கி வாழ்வதைவிட, தேவைக்கு ஏற்ப இருக்கும் பணத்தில் வாழ்வது சிறப்பு.

ஆக, முடிந்தவரை கடன் என்னும் மாய வலையில் சிக்காமல் இருப்பது நல்லது. அப்படி இருந்தால், பல பிரச்சினைகள் நம் பாதையில் இருந்து விலகிவிடும். நிம்மதி நம்முடன் இருக்கும்.



# மீன் வாங்கலயோ மீன்...?

அசைவப்பிரியர்கள் விரும்பி உண்ணக் கூடியவற்றில் மீன் முக்கியமான ஓர் உணவாகக் காலம் காலமாக இருந்து வருகிறது.

பல ஆயிரம் வருடங்களாக நம்முடைய உணவில் ஒன்றாக இருக்கிற மீன்களில் புரதம், கல்சியம், மக்னீசியம், ஒமேகா 3 கொழுப்பு அமிலம், பொஸ்பரஸ் என மனிதர்களுக்குத் தேவையான ஏராளமான சத்துகள் அடங்கியுள்ளன.

மீன் ஃபிரெஷ்ஷாக இருக்கிறதா என்பதைப் பெரும்பாலும் செவுள்களை நிமிர்த்திப்பார்த்துதான் தீர்மானிப்போம். செவுள்கள் இரத்தநிறத்தில் இல்லாமல் வெளிர் நிறத்தில் இருந்தால் அது கெட்டுப்போன மீன் என்பதை உறுதி செய்து விடலாம்

அதேபோல மீன்களை வாங்கும்போது மீனின் சதைப்பகுதியை கை விரல்களால் அழுத்திப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது மீன் விரைப்பாக, தடிமனாக இருக்க வேண்டும். தொள தொளவென இருக்குமேயானால் அது கெட்டுப்போன மீன்.


மீனின் தலைப்பகுதியைக் கைகளால் தூக்கிப் பார்த்தால், மீனின் வால்ப்பகுதி கீழே தொய்ந்து தொங்கிய நிலையில் இருந்தால், அது கெட்டுப்போன மீன். கெடாத மீனாக இருந்தால் மீனின் தலைப்பகுதியைத் தூக்கும் போது வால்ப்பகுதி விறைப்பாகத் தெரியும்.

மீனின் கண்கள் பளபளப்பாக இருக்க வேண்டும். இரத்த நிறத்திலோ, மங்கிய வெளிர் நிறத்திலோ கண்கள் இருக்குமேயானால் அது நெடுநாள் ஐஸில் வைக்கப்பட்ட மீனாகத்தான் இருக்கும்.

மீன்களை வாங்கிய பிறகு, சமைப்பதற்கு சில மணி நேரம் ஆகும் என்றால், சுத்தம் செய்யப்பட்ட மீன்களை புளிக்கரைசலில் அல்லது எலுமிச்சைச் சாறு கலந்த நீரில் ஊறவைத்தால் சமைக்கும் வரையிலும் கெடாமல் இருக்கும்.

மீன்களைச் சுத்தம் செய்ததும் உப்பு, மஞ்சள் தூள் போட்டு மூன்று முறை அலசினால், ஒருவேளை இரசாயனங்கள் பூசப்பட்டிருந்தாலும் அவற்றால் ஏற்படுகிற விளைவுகள் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.


வெயில் காலங்களில் மீன்கள் வெகு சீக்கிரமே கெட்டுவிடும். அதனால், அந்த நேரத்தில் மீன்கள் வாங்கும்போது அதிக கவனத்தோடு இருக்க வேண்டும்.





# சமைப்போம் சுவைப்போம்

## முருங்கைக்கீரை கஷாயம்




**தேவையானவை:**

1. முருங்கைக்கீரை – 5 கொத்து
2. இஞ்சி – ஒருதுண்டு (துருவிக்கொள்ளவும்)
3. மஞ்சள்த்தூள் – அரை டீஸ்பூன்
4. உப்பு – ஒரு சிட்டிகை

**செய்முறை :**

மேற்கண்ட அனைத்துப் பொருட்களையும் 2 டம்ளர் தண்ணீர்விட்டுக் கொதிக்க விடவும். 10 நிமிடங்களுக்கு மேல் கொதிக்கவிட வேண்டாம். பின்னர் வடிகட்டி அருந்தலாம். தினமும் வழக்கமாகக் கொண்டால் இந்தக் கஷாயம், படிப்படியாக மூட்டு வலியைக் குறைக்கும்.

முருங்கைக்கீரையில் மற்றத் தாவர உணவுகளில் இருப்பதைவிட 25 மடங்கு இரும்புச்சத்து அதிகம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்று அரவணைத்தவளை... இன்று நிராகரிக்க வைத்துவிட்டீர்கள்...

குழந்தைகள் சண்டையிட்டுக் கொண்டால், **"அப்போ நான் உனக்குக் கொடுத்த பென்சிலைத் திருப்பிக் கொடு"** என்பார்கள். இது குழந்தைத்தனம் அல்ல, மனிதர்கள் மனதின் அனிச்சை எதிர்வினை. இப்போது, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் என்ற இருபெரும் நாடுகளுக்கு இடையே இப்படியான சம்பவம் நடந்திருப்பது



சுவாரஸ்யமாகவும், சீரியஸாகவும் உலகைக் கவனிக்க வைத்திருக்கிறது.

சுமார் 140 ஆண்டுக்கு முன்பு பிரான்ஸ் நாட்டிலிருந்து பரிசாக வழங்கப்பட்ட சுதந்திர தேவி சிலையை வைத்திருக்க அமெரிக்காவுக்குத் தகுதியில்லை. **"எங்களிடமே திருப்பித் தந்துவிட வேண்டும்"** என்று பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என இந்தியா, பெரு, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளையும் சேர்ந்தவர்களை, மனித உரிமைக்கு எதிராகக் கைகளில் விலங்கிட்டு, இராணுவ விமானங்களில் அனுப்பி வருகிறது அமெரிக்கா. இதற்கு எதிராக உலகெங்கிலும் எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கின்றன. இது, பிரான்ஸில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**100 ஆண்டுகள், 150 பாகங்கள்..!**

18ஆம் நூற்றாண்டில் பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா விடுதலை அடைய, பிரான்ஸ்ும் முக்கியா காரணம். பிரிட்டனுடன் பிரான்ஸ்க்கு இருந்த பகையால், அமெரிக்காவின் விடுதலைப் போருக்கு பிரான்ஸ் உதவியது. அமெரிக்கா விடுதலை பெற்று 100 ஆண்டுகளைக் கொண்டாடியபோது, அந்தப் பிரமாண்ட சுதந்திர தேவி சிலையைச் செய்து, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது பிரான்ஸ். 150 பாகங்களாக அனுப்பி வைக்கப்பட்ட சிலை, ஒன்றாக இணைக்கப்பட்டு, 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்காவின் அடையாளமாக இப்போதும் அது கம்பீரமாக நிற்கிறது.

**ஆற்றுப்படுத்தி வரவேற்கும் அந்தக் கவிதை!**

வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த மக்கள், நியூயோர்க் வழியே வந்ததால், அவர்களை வரவேற்கும் விதமாக, கவிஞர் எம்மால சாரஸ் "புதிய பிரமாண்டம்" என்னும் தலைப்பில் ஒரு கவிதையை எழுதினார். அது, சுதந்திர தேவி சிலை அருகே கல்வெட்டாக நிறுவப்பட்டுள்ளது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறுவப்பட்ட இந்தக் கவிதைக் கல்வெட்டு சொல்வதுபோல், அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த மக்களின் வாழ்வு வளம் பெற்றது. ஆனால், அவர்களெல்லாம் சட்டப்படி குடியேறியவர்கள். கடந்த 30 ஆண்டுகளில் சட்டவிரோதக் குடியேற்றம் அமெரிக்காவில் பெருகியது.

**ட்ரம்ப் சூளுரையும் வெளியேற்றங்களும்!**

ஐரோப்பிய நாடுகளிலும் சட்டவிரோதக் குடியேற்றம் பெருகியது. எல்லா நாடுகளிலும் குடியேற்றத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் உருவாகின. சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு எதிராகத் தொடர்ந்து பேசி வந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இதை வைத்தே அரசியலில் இறங்கினார். 2016இல் ஆட்சியையும் பிடித்தார்.

2020இல் ஆட்சியை இழந்து, 2024இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளார். சூளுரைத்தபடியே சட்டவிரோதமாகக் குடியேறிவர்களை விலங்கிட்டு திருப்பி அனுப்பி வருகிறார்.

**சிலையைத் திருப்பித் தாருங்கள்!**

இந்நிலையில்தான், ஃபிரெஞ்சு இடதுசாரி செயற்பாட்டாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஃபேல் குளுக்ஸ்மேன், "சுதந்திரதேவி சிலையில், புலம்பெயர்ந்தவர்களுக்கு ஆதரவாகக் கவிதை எழுதப்பட்டுள்ளது." இப்போது, "சட்டவிரோதக் குடியேறிகளை வெளியேற்றுவோம்" என்றால் என்ன அர்த்தம்? சுதந்திர தேவி சிலையை வைத்திருக்க உங்களுக்குத் தகுதியில்லை. "அந்தச் சிலையைத் திருப்பித் தாருங்கள்" எனக் காட்டமாகக் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலடி தரும் விதமாக, அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கேரலின் லெவ்ட், "இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரிடமிருந்து பிரான்ஸை நாங்கள் காப்பாற்றாமல் விட்டிருந்தால், பிரான்ஸ் இப்போது ஜெர்மன் மொழி பேசிக்கொண்டு இருந்திருக்கும். சிலையைத் திருப்பிக் கொடுக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

**பாதிப்பு... அகதிகளுக்குத் தான்!**

போர், வறுமை, இயற்கை சீற்றங்களால் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் தஞ்சம் அடையும் அகதிகளை, மனிதாபிமான முறையில் அந்நாடு அனுமதிப்பது வழக்கம். ஆனால், சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களால் இப்போது அந்த அகதிகள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

அமெரிக்காவுக்கும் பிரான்ஸ்க்கும் இடையிலான இந்தப் பனிப்போர் தற்காலிகமானதுதான். என்றாலும், புலம்பெயர்ந்த மக்களை வரவேற்கும் சுதந்திர தேவி சிலை பற்றியும் அதன் வரலாறு பற்றியும் உலகை அறிய வைத்துள்ளது இந்தப் பிரச்சினை.



# தெளிவே என் சிந்தனையுள்... 3

அடுத்தவரைப் புரிந்துகொள்ளல் என்பது எம்மிடம் அறவே இல்லாத ஒன்றாகி விட்டது. எடுத்ததுக்கெல்லாம் கோபத்தைக் கணலாய் கொட்டிவிடுவது அனைத்திற்கும் தீர்வாகும் என்று நினைத்தால் அவரைப்போல முட்டாள் இந்த உலகில் வேறு எவருமாக இருக்க முடியாது.

இந்த உலகில் வாழும் உயிரினங்களில் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு மனித இனத்திடம் மட்டுமே உண்டு.

ஆதலால்தான் மனித இனம் ஓர் உன்னத இனமாக இன்றுவரை இருந்து வருகிறது.

ஆயினும் தற்போதைய மனித வாழ்வு அந்த நிலையில் இருந்து கீழ் இறங்குவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தாய் என்பவள் இந்த உலகின் அச்சாணி. ஆதலால்தான் மனிதன் வாழும் இந்த பூமியை தாய் என்று போற்றி மகிழ்கின்றோம். ஒரு தாய் தன் பிள்ளையை இந்தப் பூமியில் பிரசவித்து, அவனை இந்த உலகில் நிலைபெறச் செய்யும் பாடுகள் எண்ணிலடங்காதவை.

தாய் தன் பிள்ளையைப் பெற்றெடுக்கப் படும் பிரசவ வலி எப்படிப்பட்டதென்பதை ஒரு வைத்தியர் கூறுகிறார். **"பிரசவ வலி என்பது ஒரு மனிதனின் முதுகெலும்பை உடைப்பதைப்போன்று மூன்று மடங்கு அதிகமான வலி நிறைந்தது"** எனக் கூறுகிறார்.

அன்பானவர்களே ! ஒருவனுக்கு தன் அன்னை தன்னைப் பெற்றெடுக்கப் படும் பாட்டை உணர்விக்க மனைவியினூடே களம் அமைத்திருக்கிறான் இறைவன்.


தன் மனைவி தன் வாரிசை வயிற்றில் சுமந்த நாள் முதல் பிள்ளையைப் பெற்றெடுக்கும் நாள் வரை, பெற்றெடுத்த பிள்ளையை ஊனுறக்கம் மறந்து வளர்த்தெடுக்கும் காலம் வரை அவளின் பாடுகளை அவன் உணரும் போது தன் தாய் தன்னைப் பெற்றெடுக்கப் பட்ட வலிகள், துன்பங்கள், சொல்லமுடியாத இன்னல்களை உணர்ந்து கொள்கிறான். இந்த உணர்வே அன்பின் மிகுதியான உணர்வு. இதுவே மனித வாழ்வை உணர்விக்க வல்லது. அன்பினால் உருவான இந்த உலகை அன்பினால் ஆளுவதே பொருத்தமானது.

**கோபம் கொடும் அரக்கன்! அன்பு தெய்வத்தின் வடிவம்!**



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலம் பல கண்ட யாழ். கோட்டை

50

## செங்கை ஆழியான்

முற்றவெளியெங்கும், வீதிகள் எங்கும் விடுதலைப்புலிகளால் விதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற விடவில்லை.

அதனால் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் தொடர்ந்து கோட்டைக்குள்ளிருந்து ஷெல் தாக்குதல்களையும், வெகுதூரம் பாய்கின்ற ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் ஓயாது யாழ்ப்பாண நகரத்திற்கும் சுற்றுப்புறத்திற்கும் ஏவினர். 1987 ஆம் ஆண்டு முடிவுவரை ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தன. 1987 ஆரம்பத் தில் ஷெல் தாக்குதல்களோடு, பொம்பர் குண்டு வீச்சு விமானங்களும் யாழ்ப்பாணப் பகுதியில் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டன.

21. மே.1986 இல் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று கன்னாதிட்டியில் விழுந்து வெடித்ததில் 9 பேர் பலியாகினர். கடைகள் சில சேதமடைந்தன. 11, ஜூன் 1986 இல் மண்டைதீவுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 31 குருநகர் மீனவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கொரூரமாக வெட்டியும் குத்தியும் சுட்டும் கொல்லப் பட்டனர் 30, ஜூலை, 1986 இல் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் அத்தியடி, ஆரியகுளம், கொட்டடி, ஆனைப்பந்தி, நாவலர் வீதி முதலான பகுதிகளில் விழுந்து வெடித்ததால் 3 பேர் பலியாகினர். 14 பேர் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

24.ஒகஸ்ட், 1986 இல் நிகழ்ந்த கோட்டைச் ஷெல் தாக்குதல்கள் மிக மோசமானவை. ஆஸ்பத்திரி வீதியில் காலை மக்கள் நடமாட்டம் அதிகமாகவிருந்த வேளையில் விழுந்த ஷெல்கள், ஹற்றன் நசனல் வங்கி முகாமையார் எஸ். சூரிய குமாரைப் பலியெடுத்தது. அவருடன் நான்கு பேர் மரணமாகினர்.

புத்தகக்கடையில் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த றெஜி பீரிஸ் என்ற 18 வயதுப்பெண் மரணத்தைத் தழுவ நேர்ந்தது. முத்துக்குமார் என்ற வயோதிபர் கணத்தில் பலியானார். ஏராளமான மக்கள் அன்று காயம் அடைந்தனர்.

யாழ் கோட்டையிலிருந்து 23. ஒகஸ்ட், 1986 இல் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று வெகுதூரம் பயணம் செய்து ஐயனார் கோயிலடியில் திருமண வீடொன்றின் மேல் விழுந்தது. திருமணம் தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் கோவிலில் நிகழ்ந்தது. துர்க்கையம்மன் ஆலயத்தில் தாலிகட்டி முடிந்து, மணமகன் வீட்டிற்கு வருகை தந்திருந்த மணமக்கள் இருந்த வீட்டின் கூரை மீது விழுந்த ஷெல் கீழே இறங்கியது. மணமகன் உதய சூரியன் மணவறை உடைகளோடு இரத்த வெள்ளத்தில் பலியானார். அவர் அருகில் நின்றிருந்த இராசதுரை என்ற வயோதிபரும் பலியாக நேர்ந்தது.

பலர் காயமடைந்தனர். புதிய வாழ்வின் ஆரம்பத்திலேயே கருகிப்போன மணமகள் சகுந்தலா தேவியின் கண்ணீர் யாழ்ப்பாணத்தைச் சோகத்திலாழ்த்தியது.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்

## கடற்புறா

இரண்டாம்பாகம்



காலத்தின் பதிவுகள் 145

இரு முறை கோட்டான்கள் பலமாக அலறும் சத்தம் அந்த நந்தவனத்தை ஊடுருவிச் சென்றது. அந்த ஒலியைத் தொடர்ந்து திடீரென மாளிகையின் கதவொன்று பலமாகத் திறந்தது. யாரோ வேகத்துடன் ஓடி வரும் ஓசையும் மஞ்சளழகியின் செவிகளில் விழுந்தது. கடற் சிப்பியின் ரகசியம் மெல்ல மெல்ல உதயமாயிற்று அவள் சிந்தையில். "இந்த ஊதல் ஊதல்.. இதை ஊதினால் சாதல், சாதல் சாதல்! உண்மை தெரிந்துவிட்டது எனக்கு" என்று சொல்லிக்கொண்டே மஞ்சளழகி, "வருகிறது ஆபத்து! ஆனால் அதுதான் தெரிகிறதே அவருக்கு," என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவள் எதிர்பார்த்த ஆபத்து அந்தச் சமயத்தில் மாளிகைத் தோட்டத்தின் கதவை ஓசைப்படாமல் திறந்துகொண்டு அடிமேலடி வைத்து அவளிருந்த திக்கை நோக்கி வந்தது. திகிலால் அவள் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

கடற்சிப்பியைக் கச்சையிலிருந்து எடுத்துக் காட்டி அது ஓர் ஊதுகுழல் என்பதைப் புலப்படுத்தி, அதை ஊதி விடும்படியும் உத்தரவிட்டு இளையபல்லவன் சென்ற இரவுக்குப் பிறகு மஞ்சளழகியின் நிலை பெரிதும் மாறு பட்டுவிடவே, அவள் பழைய மஞ்சளழகியாயில்லாமல் புது மஞ்சளழகியாகி ஏதோ உணர்ச்சியற்ற ஒரு பதுமை உலாவுவது போல் உலவி வந்தாள். அவள் மாற்றத்தை அக்ஷயமுனை நகர மக்களும் கடற்கரைக் கொள்ளையரும், இளையபல்லவனைச் சேர்ந்த மாலுமிகளும் கண்டாலும் அதன் உண்மைக் காரணத்தை அறியாமல், இல்லாத காரணங்களையும் தாங்களாகவே கற்பித்துக்கொண்டு அவற்றைப் பகிரங்கமாகப் பேசவும் தலைப்பட்டார்கள்.

இளையபல்லவனிடம் அவளுக்கிருந்த காதலே அந்த மாற்றத்துக்குக் காரணமெனச் சிலர் நினைத்தார்கள். அந்தக் காதலும், இளையபல்லவன் குடி வெறியாலும் பண்பற்ற நடத்தையாலும் வெறுப்பாக மாறியிருக்க வேண்டுமென்று இன்னும் சிலர் நினைத்தார்கள். பூர்வக் குடிகளின் விரோதத்தால் தன் தந்தைக்கும் இளைய பல்லவனுக்கும் என்ன தீங்கு நேரிடுமோ என்ற திகில்தான் காரணமென்றும் மற்றும் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். காரணம் எதுவாயினும் பழைய மஞ்ச ளழகி மாறிவிட்டாள் என்பது மட்டும் தெளிவாகத் தெரியவே, அவளை அறிந்த, அவள் நட னத்தை வருஷாவருஷம் ரசித்த, அத்தனை மக்களும் அவள் நிலை பற்றி வருந்தவே செய்தார்கள்.

கொள்ளையரின் துணைவிகள் அவளைக் கடற்கரையிற் பார்த்தபோதெல்லாம் அவளது வெறித்த பார்வையையும், கேட்டதற்குத் தாமதித்து வந்த அவள் பதிலையும், சிலசமயங்களில் திடீர் எனத் தூக்கி வாரிப் போட்டது போல மிரண்ட அவள் விழிகளையும் கண்டு பெரிதும் பரிதாபப்பட்டார்கள். அதே கடற்கரையில் அலட்சிய நடை நடந்து கொள்ளையரைத் தட்டிக் கொடுத்தும், கொள்ளையர் மாதரைக் கேலி செய்தும், சுதந்திரப் பறவையாக விஷமக்களஞ்சியமாக விளங்கிய அந்தக் கட்டழகி மறைந்துவிட்டாள்.

யாரிடமும் அணுகாத, அணுகினாலும் உடனடியாகப் பேசாத, பேசினாலும் சட்டென்று கத்தரித்துக் கொண்டு கடற்கரை நீர் முனைக்குச் சென்றுவிடும் புத்தம்புது பதுமையைக் கண்ட கொள்ளையர் பெரிதும் வருந்தினார்கள். கொள்ளையர் மட்டுமென்ன, இளையபல்லவனது மரக்கலத்தை வெகு துரிதமாக மாற்றியமைத்துக் கொண்டிருந்த தொழில் வல்லுநரும் கண்டியத்தேவனும் இதர மாலுமிகளுங் கூட அவள் நிலை கண்டு வருத்தப்பட்டார்கள். கோட்டைக்குள்ளும் கடற்கரையிலும் பலபல கண்கள் பலபல உள்ளங்கள் தன்னைக் குறித்துப் பரிதாபப்படுவதைக் கூடக் கவனியாமல் மஞ்சளழகி நகரத்துக்குள்ளும் வெளியிலும் உலாவினாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி னி மா CINEMA

# எங்கே அந்த வெண்ணிலா... மறைந்தது?

**இயக்குநர் பாரதிராஜாவின் மகனான மனோஜ் பாரதிராஜா (48) மார்ச் 25 மாரடைப்பினால் காலமானார்.**

1976 ஆம் ஆண்டு பிறந்த இவர் தன் தந்தையின் இயக்கத்தில் 1999 ஆம் ஆண்டு வெளியான தாஜ்மஹால் திரைப்படம் மூலம் நாயகனாக அறிமுகமானார். தனக்கு இயக்குநராக வேண்டும் என்பதுதான் கனவு எனவும் தன் தந்தை சொன்ன காரணத்தால் தான் நடிகரானதாகவும் பல நேர் காணல்களில் பின்னாட்களில் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து அல்லி அர்ஜுனா, வருஷமெல்லாம் வசந்தம் போன்ற திரைப்படங்களில் நாயகனாகத் தோன்றினார். இதில் வருஷமெல்லாம் வசந்தம் திரைப்படத்தில் ஏற்கனவே நல்ல வரவேற்பு பெற்ற **“எங்கே அந்த வெண்ணிலா”** பாடல் தற்கால இளைஞர்களால் சமூக வலைத்தளங்களில் ட்ரெண்ட் ஆனது. நடிகர்கள் சரத் குமார், முரளி உடன் இணைந்து இவர் நடித்த சமுத்திரம் திரைப்படத்தில் இவர் ஏற்று நடித்த தம்பி கதாபாத்திரம் பலருக்கும் மிகவும் பிடித்து மனதில் பதிந்த கதாபாத்திரமாகும்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவான எந்திரன் திரைப்படத்தில் இவர் ஒரு துணை இயக்குநர் என்பது சமீபத்தில் வெளியான ஷூட்டிங் புகைப்படங்களின் மூலம் தெரிய வந்தது. சிட்டி வேடத்தில் ஷூட்டிங் எடுத்ததில் நிறைய காட்சிகள் இவர்தான் டூப் ஆக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.



நாயகனாக பல திரைப்படங்கள் நடித்திருந்தாலும் பெயர் சொல்லும் அளவிற்கு பெரிய வெற்றிப் படங்கள் அமையவில்லை. எனினும் வித்தியாசமான கதைகளைத் தேர்வு செய்து நடித்து வந்தார். பல திரைப்படங்களில் துணை கதாபாத்திரங்களில் தோன்றி வந்தார். விருமன், மாநாடு, ஈஸ்வரன் போன்ற திரைப் படங்களில் துணைக் கதாபாத்திரங்களில் நடித்து கவனம் ஈர்த்தார். மேலும் தனது இயக்குநர் பயணத்தை மார்கழித் திங்கள் என்ற திரைப்படத்தின் மூலம் தொடங்கினார் மனோஜ். புது முகங்களை வைத்து இயக்கியிருந்த இத்திரைப் படத்தில் இவரின் தந்தை பாரதிராஜா முக்கிய வேடத்தில் நடித்திருந்தார். தன் உடன் நடித்த நாயகி நந்தனாவைக் கதாலித்துத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள்.




ராம்சரனின் புதிய பட போஸ்ரர் வெளியீடு...

# குட் பேட் அக்லி சாதனை படைக்கும்



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் குமார் நடிப்பில் முதன் முறையாக உருவாகியிருக்கும் திரைப்படம் குட் பேட் அக்லி. ஜி.வி பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சுமார் ரூ. 250 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ள இப்படம், உலகளவில் ரூ. 500 கோடிக்கும் மேல் வசூல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், குட் பேட் அக்லி படத்தின் தயாரிப்பாளர் ரவி சங்கர் இப்படம் குறித்து நிகழ்ச்சி ஒன்றில் பேசிய விடயம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதில், “குட் பேட் அக்லி” திரைப்படம் இதுவரை தமிழ் சினிமாவில் வெளியான படங்கள் முதல் நாளில் வசூலித்ததை விட அதிக வசூல் செய்து சாதனை படைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# பொங்கல் கொண்டாட வருகிறான் ஜனநாயகன்




தளபதி விஜய் அரசியலில் களமிறங்கியுள்ள காரணத்தினால், சினிமாவிலிருந்து முழுமையாக விலகப் போகிறார். ஜனநாயகன் திரைப்படம்தான் தனது கடைசிப் படம் என அறிவித்துள்ளார்.

அதன்பின் முழுமையாக அரசியல் மட்டும் தான் என்று கூறியிருக்கிறார். இயக்குநர் ஹெச். வினோத் இயக்கி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து மமிதா பைஜூ, பூஜா ஹெக்டே, ப்ரியாமணி, கவுதம் மேனன், பாபி தியோல் உள்ளிட்ட பலரும் நடித்து வருகிறார்கள். அனிருத் இப்படத்திற்கு இசையமைத்து வருகிறார். சமீபத்தில் இப்படத்தின் ரிலீஸ் குறித்து அறிவிப்பை வெளியிட்டனர். அதன்படி, வருகிற 2026 பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இப்படம் வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜனநாயகன் படத்தின் முதல் பாடல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, விஜய் ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஜனநாயகன் படத்தின் முதல் பாடல் வருகிற ஜூன் 22ஆம் திகதி தளபதி விஜய்யின் பிறந்தநாள் அன்று வெளிவரும் என கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

443

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# வளர்ந்து வரும் பிள்ளைகள்; பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவை...

வளர்ந்து வரும் பிள்ளைகளின் சத்திரசிகிச்சை சம்பந்தமான விடயங்கள் பற்றி பெற்றோர் அறிந்திருக்க வேண்டியது அவசியம். சிறு பிள்ளைகளில் ஏற்படும் ஹேர்னியா குறித்து நீங்கள் எல்லோரும் அறிந்ததே. அதேபோல், பொக்குளில் ஏற்படும் ஹேர்னியா மற்றும் விதைப்பையில் ஏற்படும் நீர்க் கட்டிகள் ஆகியவையும் முக்கியமாக அறிந்திருக்க வேண்டிய விடயங்களாகும். முதலாவதாக ஹேர்னியாவை எடுத்தால், ஹேர்னியா என்பது குடலின் சில பகுதிகள், சிறு பையினூடாக வயிற்றிற்கும் காலிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு கழலை போன்று காணப்படும் நிலை ஆகும்.

ஒரு ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்பே, விதையானது விதைப்பைக்குள் வந்து விடுகிறது. அப்படி விதைப்பைக்குள் வரும் போது, அது வரும் பாதை குழந்தை பிறந்தவுடன் மறைக்கப்பட்டு விடும். சில குழந்தைகளில் அந்த பாதை மறையாது. இந்தப் பாதை தொடர்ச்சியாக இருப்பதால், அதனூடாக வயிற்றிலிருந்து குடற் பகுதிகள், நீர் என்பன விதையை நோக்கி வரலாம்.

அப்படி குடற்பகுதிகள் வரும் போது அதனை ஹேர்னியா என்று சொல்வோம். இந்த ஹேர்னியாவானது பெரியவர்களை விட சிறு பிள்ளைகளில் அதிகளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும். அதனால், சிறு பிள்ளைகளில் ஹேர்னியா காணப்படும் போது, கூடிய விரைவில் வைத்தியரை நாட வேண்டியது அவசியம்.

ஹேர்னியா சத்திர சிகிச்சை என்பது ஒரு சிறிய சத்திர சிகிச்சை ஆகும். இதில் முக்கியமானதொரு விடயம் என்னவென்றால், தொடர்ச்சியாக ஹேர்னியா காணப்படும் போது, குடல் கீழே இறங்கும் போது சடுதியாக சில மாற்றங்கள் ஏற்படும். அந்த மாற்றங்கள், குடல் முறுக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு உருவாகும் குடல் முறுக்கத்தால், குடலிற்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால், குடல்பகுதி செயலிழந்து விடும்.

இதனால், செயலிழந்த குடல் பகுதியை அகற்றி, மீதமுள்ள குடல் பகுதிகளை ஒன்றுடன் ஒன்று தைக்க வேண்டிய நிலை ஏற்படும். இவற்றைத் தடுக்க வேண்டுமானால், ஹேர்னியா இருக்கும் போது, உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.

ஹேர்னியாவானது, சில குழந்தைகளில் இரைப்பைப் பகுதியில் மட்டும் கழலை போன்று காணப்படலாம் அல்லது இரைப்பை பகுதியில் இருந்து விதை வரை அது கீழிறங்கக் கூடும்.

இப்படியான சந்தர்ப்பத்தில், பெரும்பாலும் குழந்தை அழும் போது அல்லது மலம் கழிக்கும் போது இந்த கழலை வெளித்தள்ளப்படுவதை நீங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

வெளித்தள்ளப்படும் கழலை தானாக உட்செல்லுமாயின் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது உட்செல்லவில்லை எனில் நீங்கள் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும். ஏனெனில் இது, குடல் முறுக்கத்தை ஏற்படுத்தும். வயது வேறுபாடின்றி எல்லா வயது பிள்ளைகளிலும் இந்த பிரச்சினை காணப்படலாம். இந்த ஹேர்னியா வந்த அனைவருமே சத்திர சிகிச்சை செய்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், மருந்துகளால் ஹேர்னியாவை குணப்படுத்த முடியாது.

அடுத்ததாக, விதையில் நீர்க்கட்டிகள் உருவாகலாம். ஹேர்னியா எப்படி உருவாகிறதோ அதேபோல் குடல் பகுதிகளுக்கு பதிலாக, வயிற்றிலுள்ள நீர் கீழிறங்கி விதைப் பைக்குள் வரும் போது, இந்த நீர்க் கட்டிகள் உருவாகின்றன. இவ்வாறான நீர்க்கட்டிகள் இருக்கும் போது பயப்பட வேண்டிய அவசியமில்லை. இது எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

இந்த நீர்க் கட்டிகள் ஏற்பட்ட குழந்தைகளை, மூன்றரை வயது வரை அவதானித்தலில் வைத்துக் கொண்டால் போதும். மூன்றரை வயது பிந்தும் போதும் இந்த நீர்க் கட்டிகள் மறையவில்லை எனில், அவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியது அவசியம். ஹேர்னியா, நீர்க்கட்டிகள் இரண்டுமே ஒரே மாதிரியான தோற்றமுடையவை. நீங்கள் அவதானிக்கும் போது நீர்க்கட்டிகள் எந்த நேரமும் விதைப் பையில் காணப்படும். ஆனால், ஹேர்னியாவானது குழந்தை அழும் போது அல்லது மலம் கழிக்கும் போது மட்டுமே வெளித்தள்ளப்படும். எனவே இவற்றை இலகுவாக உங்களால் அடையாளம் காண முடியும். மூன்றாவது முக்கியமான பிரச்சினை, சிறு பிள்ளைகளின் பொக்குளில் ஏற்படும் ஹேர்னியா ஆகும்.

இதன்போது, வயிற்றினூடாக பொக்குளில் வெளித்தள்ளிய நிலையில் கழலைகள் காணப்படும். இது நாம் நினைக்கும் அளவிற்கு பாரதூரமானதொரு பிரச்சினை இல்லை. பிறந்தவுடன் எல்லாக் குழந்தைகளுக்குமே இந்தப் பொக்குள் ஹேர்னியா காணப்படும். சில குழந்தைகளுக்கு அது தானாகவே மறைந்து விடும்.

சில குழந்தைகளில் இந்த ஹேர்னியா தொடர்ந்து காணப்படும் போது குடல் பகுதிகள் உள்ளிறங்கி, குடல் முறுக்கம் ஏற்படும். தொடர்ச்சியாக இது காணப்படும் போது, குழந்தைகளும் அசாதாரணமாக உணருவார்கள். அவர்களுக்கு நோ தன்மையும் ஏற்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தல், வயிறு வீக்கம் போன்றவை காணப்படும். இவ்வாறு ஏற்பட்டால், உடனடியாக வைத்தியரை நாடி மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்.

இல்லையென்றால் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. குழந்தை வளரும் போது, வயிற்றுத் தசைகள் இறுக ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில், அந்தத் துவாரம் தானாக மூடி விடும்.

இத்தகைய ஹேர்னியா உடைய குழந்தைகளுக்கு, மூன்றரை அல்லது நான்கு வயது வரை எந்தவித சத்திரசிகிச்சையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நான்கு வயதாகும் போது, இந்த ஹேர்னியா மறைந்து விடும். இது அளவில் குறைந்து 5 மீற்றரிற்கு வரும் போது சத்திரசிகிச்சை செய்ய தேவையில்லை.

ஆனால், சில குழந்தைகளுக்குத் தொடர்ச்சியாக பொக்குளைச் சுற்றி நோ காணப்படும் போது அவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியது அவசியமாகும்.


இதைத்தவிர தொடர்ச்சியாக அந்த ஹேர்னியா வெளித்தள்ளியபடி இருக்குமாயின், சத்திர சிகிச்சை செய்யலாம்.எனவே இவ்வாறான முக்கியமான விடயங்களை அறிந்து கொள்வதுடன், ஹேர்னியா சத்திர சிகிச்சை ஆபத்தானது என்ற தவறான மனப்பதிவை நீக்கிக் கொள்வது சிறந்தது.

**Dr. இரஞ்சிததர்சினி வசீகரன்**
**குழந்தை நல சத்திரசிகிச்சை நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு 04



அன்பு ஜவஹர்ஷா

இவ்வாறு இந்த சேவையில் உள்ள சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்க கடந்த ஆண்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் அதை கல்வி அமைச்சு அச்சேவையின் சம்பளத்தைத் திருத்துவதாக வாக்குறுதி அளித்தும் கூட 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை. 03/2016 (IV) ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்குச் சமாந்தரமாகவே இந்தச் சுற்றறிக்கையில் சம்பளம் செய்யப்பட்டுள்ளது. சரி செய்யும்படி தொடர்பாக அறிவுறுத்தல் இருந்தாலும் அது இன்னும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்த நட்டத்தை ஈடுசெய்ய இலங்கை அதிபர் சேவை மூன்றாம் வகுப்பு 700 ரூபாவும் ஆசிரியர் ஆலோசகர்களுக்கு 230 ரூபாவும் சரி செய்யும்படியாக செலுத்தப்பட்டது.



இதைச் சேர்த்து புதிய சம்பளத்தை கணிக்கக் கூடாது என்பது சரியாக இருந்தாலும் இந்த அடிப்படையில் புதிய சம்பளத்திற்குரிய சரி செய்யும் படியையும் முன் படிகளுடன் சேர்த்து கணக்குப் பார்த்து தொடர்ந்து செலுத்தி வந்தால் இவர்களது சம்பளம் குறைய மாட்டாது.

ஆனால் 2009 முதல் இந்தப் பாதிப்பு தொடர்பான சீராக்கல் படி அல்லது சரி செய்யும்படி தொடர்பாக வெளிவந்த எந்தச் சுற்றறிக்கையும் இது வழங்கல் தொடர்பாக தெளிவான விளக்கத்தைத் தரவில்லை. 10/2025 ஆம் இலக்க புதிய சுற்றறிக்கையில் 3.12 உப பிரிவிலும் தெளிவாக விளக்கம் இல்லை. இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட 03/2016 ஆம் சுற்றறிக்கையில் 4.3 பிரிவின்படி சொல்லப்பட்டு உள்ள விடயத்தை அவதானித்தால் இதைச் செலுத்துவதில் சிக்கல் உள்ளது. இந்த விடயம் தொடர்பாக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படியும் கல்வி அமைச்சரின் சுற்றறிக்கையின் படியும் முரண்பாடுகள் இருப்பதால் தொடர்ந்து இதை வழங்குவதில் சிக்கல்கள் தோன்றலாம்.

மேல் சொல்லப்பட்ட வரிச் சம்பள சிக்கல் இப்படி இருக்க அதிபர் -3 நியமனம் பெறும்போது இலங்கை ஆசிரிய சேவையில் 2-II, 2-I தரத்தில் இருந்தவர்கள் தம்மோடு சேவைக் காலம் உள்ளவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையில் முதலாம் வகுப்பில் அதிகம் சம்பளம் பெறுகின்றவர்களோடு ஒப்பிட்டு தமக்கு 10,800 ரூபா, 15,000 ரூபா குறைகின்றது என்று கவலைப் படுகின்றார்கள். ஆசிரியர், அதிபர் சேவைகளின் சம்பளப்படிமுறைகளையும் பதவி உயர்வுகளையும் அறிந்துகொள்ளாமல் அதிபர் மூன்றாம் வகுப்புநியமனத்தைபெற்றமை தவறாகும்.

அடுத்த பிரதான விடயம் என்னவென்றால் மற்றைய அரச சேவைகளோடு ஒப்பிடும்போது ஆசிரியர், அதிபர் சேவையினருக்கு 12,500 முதல்சேவைக் காலம் கூடியவர்களுக்கு 50,500 ரூபா வரை 20 மாதங்களில் சம்பள உயர்வு கிடைக்க இருந்தாலும் பெரும்பாலான ஆசிரியர்கள் வேறு எதிர்பார்ப்பில் இருந்தபடியால் தகுதியற்ற நிலையில் இருக்கிறார்கள். 1997.01.01 முதல் இலங்கை நிர்வாக சேவை சம்பளம் தமக்கேயுரியது என்ற போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் இவர்களை வழி நடத்தியுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

2018 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர், அதிபரின் தொழிற்சங்கப் போராட்டங்கள் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் வலுப் பெற்றபோது இடைக்காலத் தீர்வாக இங்குள்ள இரண்டாம் அட்டவணையில் உள்ள சம்பள அதிகரிப்பு கிடைத்தது. இது ஆசிரியர், அதிபர், ஆசிரிய ஆலோசகர் சேவைகளுக்கு மட்டும் கிடைத்த சம்பள உயர்வாகும்.

1994.10.06 முதல் நாடளாவிய சேவைகளுக்கு சமமான சம்பள முறைகளே ஆசிரியர் சேவையினருக்கும் வழங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு இருந்தது. 3-II,3-I என்பன தற்காலிக சம்பளத் திட்டத்தில் சொல்லப்பட்டு இருந்தாலும் 2-II,2-I, I ஆகியனவே நாடளாவிய சேவைகளுக்கும் சமாந்தரமான சம்பளத் திட்டமாகக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் நடாளாவிய சேவையினர் இந்த முரண்பாட்டுக்கு தீர்வு காணும் வரை 2,000, 1750, 1500 என்ற வகையில் மூன்று தரங்களுக்கு மேலதிக படியொன்றைப் பெற்று வந்தமை இங்கு குறித்துக் காட்ட வேண்டும்.

1997.01.01 முதல் செயற்படுத்தப்பட்ட பி.சி.பெரேரா சம்பள ஆணைக்குழு அறிக்கையின்படி இந்த நாடளாவிய சம்பளத் திட்டம் இல்லாமல் செய்யப்பட்டது. இது முதலே கிடைத்த உயர்வையே தமக்கு கிடைக்க வேண்டும் என கடந்த 27 வருடங்களாக பல்வேறு வகையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பி.சி.பெரேரா இந்த SLI சம்பளத் திட்டத்தை ஆசிரியர், அதிபர் சேவைக்கு வழங்க முடியாமைக்குப் பல காரணங்கள் முன்வைத்துள்ளது. அதில் ஆறு மணித்தியாலய வேலை நேரமும் ஒன்றாகும்.

15/2003, 09/2004, 06/2006, 06/2006 (XII), 03/2016 ஆம் இலக்கங்கள் கொண்ட சம்பள சுற்றறிக்கைகளால் இதற்கு தீர்வு காணாத நிலையில், 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மேலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் 2018 இல் இடைக்கால சம்பளத்திட்டமொன்று முன் வைக்கப்பட்டது. இதுவே 2022.01.01 முதல் ஆசிரியர், அதிபர், ஆசிரியர் ஆலோசகர் சேவையினருக்கு வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டளவில் கல்வி அமைச்சர் மேலதிக செயலாளர் சுபோதினி அம்மையார் தலைமையில் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அது நாடளாவிய சேவைகளின் சம்பளத்தையே சிபார்சு செய்து இருந்தது. 2022.01.01 முதல் வழங்கப்பட்ட சம்பளம் இதன் மூன்றில் ஒன்றாகக் கொள்ளப்பட்டு மீண்டும் 2/3 சம்பளத்தைப் பெற்றுத் தருமாறு ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் தொடர்ந்து போராடி வருகின்றன.

13 நாடளாவிய சேவைகள் உள்ள நிலையில் இவைகளின் 1 ஆம் வகுப்பால் 2000-3000 வரை ஆளணியினர்கள் இருப்பார்கள். இலங்கை ஆசிரியர், அதிபர், ஆசிரிய ஆலோசகர் சேவை 60,000-70,000 பேர்கள் அடங்குவார்கள். இதேபோல நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு நிபந்தனைகள் மிகக் கடுமையானவை. 1990 ஆம் ஆண்டு முதல் பயிலுநர், தொண்டர், ஆசிரியர் உதவியாளர் என்ற வகையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நிறைய விமர்சனங்கள் உள்ளன. கல்விமாணி போன்ற தொழில், கல்வித் தகைமையுள்ள பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்கு முறையான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டால் நாடளாவிய சேவைப் போராட்டம் இன்னும் வலுவுடையதாக இருக்கும். இன்று நாடளாவிய சேவையினரின் முதலாம் வகுப்பு அலுவலர்களுக்கு வழங்க குறிக்கப்பட்டுள்ள ஆரம்பநிலை சம்பளமான 1,33,570 ரூபா ஆசிரியர் சேவை முதலாம் வகுப்புக்கு வழங்கப்பட்டால் தான் ஆசிரியர் சேவையினர் திருப்தி காணுவார்கள். இதில் சாத்தியப்பாடு தொடர்பாக கடந்த மாதம் வெளியான எனது ஆக்கங்களில் தெளிவு படுத்தியுள்ளேன்.

**அட்டவணை-2**

**2022.01.01 முதல் 2027.01.01 வரை கிடைக்கும் அதிகரிப்பு**

| | 2022.01.01 அதிகரிப்பு | 2025.04.01- 2027.01.01 அதிகரிப்பு | மொத்த அதிகரிப்பு | 2025.01.01 (2027.01.01) ஆரம்ப சம்பளம் |
|---|---|---|---|---|
| இலங்கை ஆசிரியர் சேவை | | | | |
| இ.ஆ.சே 2-11 | 5,875.00 | 20,205.00 | 26,080.00 | 66,880.00 |
| இ.ஆ.சே 2-1 | 8,250.00 | 26,855.00 | 35,105.00 | 81,780.00 |
| இ.ஆ.சே 1 | 11,820.00 | 34,310.00 | 46,130.00 | 98,580.00 |
| இலங்கை அதிபர் சேவை | | | | |
| இ.அ.சே 3 | 6,895.00 | 22,605.00 | 29,500.00 | 72,280.00 |
| இ.அ.சே 2 | 8,645.00 | 27,825.00 | 36,470.00 | 83,970.00 |
| இ.அ.சே 1 | 12,020.00 | 35,495.00 | 47,515.00 | 101,340.00 |
| SL-I நாடளாவிய சேவைகள் | | | | |
| இ.நி.சே 111 | | 27,035.00 | 27,035.00 | 82,150.00 |
| இ.நி.சே 11 | | 38,955.00 | 38,955.00 | 109,090.00 |
| இ.நி.சே 1 | | 49,895.00 | 49,895.00 | 133,570.00 |

இந்த இரண்டாம் அட்டவணையில் நாடளாவிய சேவைகளோடு ஒப்பிட்டு அதிகரிப்பு தொடர்பாக காட்டியுள்ளேன். 2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆசிரியர், அதிபர்களின் தொடர் தொழில் சங்க போரட்டங்களின்படியே 2022.01.01 முதல் சம்பள அதிகரிப்பு கிடைத்தது. அந்த அதிகரிப்பே இன்றைய அதிகரிப்புக்கும் வழி சமைத்துள்ளது என்பதை ஆசிரியர்கள் மறந்துவிடக் கூடாது. 2022.01.01 முதல் சம்பள அதிகரிப்பு கிடைக்காவிட்டால் இன்று கிடைத்துள்ளதைவிட 5000 முதல் 15,000 வரையிலான குறைந்த சம்பள அதிகரிப்பே கிடைத்து இருக்கும்.

10/2025 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை தொடர்பாக விமர்சிக்கும் ஆசிரியர், அதிபர்கள் இந்த அட்டவணையையும் கூர்ந்து பார்த்த பின்னர் தமது கருத்துக்களைப் பதிய வேண்டும்.

கடந்த மூன்று நாட்கள் வெளியான ஆக்கங்களில் பிரதான விடயங்கள் சொல்லப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்தும் போது இன்னும் குறைபாடுகள் வெளிவரலாம். நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து சாத்தியமான தீர்வைத் தர வேண்டியது அரசின் கடமையாகும்.

சுமார் 14 இலட்ச அரசாங்க ஊழியர்களும் ஆவலுடன் எதிர்பார்த்த இந்த சம்பள அதிகரிப்பை 2025 ஏப்ரல் மாத சம்பளத்துடன் வழங்க அரசு துரித ஏற்பாடுகளை செய்து வருகின்றமை நல்ல சகுனமாகும். 2025.03.25 அன்று 186 பக்கங்களைக் கொண்ட சுற்றறிக்கையை வெளியிட்டதோடு நின்று விடாது, அடுத்த தினமே இந்த சம்பள மாற்றத்தை இலகுவாகவும் விரைவாகவும் தயாரிக்க வழிகாட்டும் மென்பொருள் ஒன்றையும் வெளியிட்டமை பாராட்டத்தக்க விடயமாகும். அரச சேவையின் வினைத்திறன் அதிகரிக்கும் முயற்சியில் இதை ஆரம்ப படி நிலையாகக் கொள்ளலாம். சமூக வலைத்தளங்கள் ஊடாக கிடைக்கும் தகவல்கள் இந்த செயற்பாட்டை உறுதிப் படுத்துகின்றன.


சில பிரதேசக் காரியாலயங்கள் தமது ஊழியர்களுக்கு அதிகரிக்கும் தொகையை அறிய இப்போதே வசதி செய்துள்ளது. சம்பள மாற்றக் கடிதங்கள் கூட முகநூலில்களில் உலா வருகின்றன. மாதக் கணக்கில் செய்யும் பணிகளை ஒரு சில தினங்களில் இப்படிப் பூர்த்தி செய்வது விதந்துரைக்க கூடிய விடயமே. சம்பள அதிகரிப்பு மட்டுமல்லாது பொதுமக்களின் மற்றைய தேவைகளையும் அரச ஊழியர்கள் இவ்வாறு ஆர்வம் காட்டி செயற்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ
05
*
03
*
1942



மனம் நெகிழ
09
*
04
*
2024

## அமரர். பரராஜசிங்கம் ஸ்ரீபாலச்சந்திரன்
## (சச்சி மாஸ்டர்)

**(பழைய மாணவன், யாழ். இந்துக் கல்லூரி, ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் (கணக்குப்பகுதி) - யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

**திதி : 30.03.2025 (வளர்பிறைப் பிரதமை)**

ஈராறு மாதங்கள் கடந்தன எங்கு சென்றீர்கள் எம்மை விட்டு
தேடித் தேம்பினோம் உங்களை எண்ணி
தேற்றுவார் யாருமில்லை உங்களைப் போன்று
கண்முன்னே எம்மோடு வாழ்ந்த வாழ்க்கை
கானல் நீராய் மறைந்தது ஏனோ?
காலம் செய்த கோலமோ ! காலன் செய்த சதியோ !
கண்ணீருடன் காத்து நிற்கின்றோம்
காலமெல்லாம் உங்கள் நினைவுகளோடு
காத்திருப்போம் உங்கள் விழுதுகளாய்.

**உங்களது ஆத்மா நயினை நாகபூசணித் தாயாரின் பொற்கமல பாதத்தில் அமைதியுற்றுச் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**"பிருந்தாவனம்"**
**இல.886, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கனடியப் பிரதமரை சந்தித்ததுபோல இந்தியப் பிரதமர் மோடியை...

2016ஆம் ஆண்டு கனடா நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கனடியப் பிரதமரை அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் வைத்துச் சந்தித்தது.

சந்திப்புக்கு இரா.சம்பந்தர் தலைமை தாங்கினார். சிங்களப் பேரினவாத அரசாங்கத்துக்கு எதிராகக் கனடியப் பிரதமரிடம் எதுவும் தெரிவித்துவிடக் கூடாது என்பதில் சம்பந்தர் உறுதியாக இருந்தார்.

தவிர, அப்போது வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் அங்கு கதைப்பதற்கு இடமளிக்கப்படவில்லை.

இதற்கும் மேலாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாகக் கூடி நின்று கதறி அழுது; கனடியப் பிரதமரிடம் எங்கள் துன்பத்தை – எங்கள் பிள்ளைகளுக்கு நேர்ந்த அவலத்தை எடுத்துக்கூறுவதற்கு உதவுங்கள் எனக் கெஞ்சி மன்றாடினர்.

ஆனால் அந்த மக்கள் கனடியப் பிரதமரைச் சந்திப்பதைத் தவிர்க்கும் வழிகளை இரா.சம்பந்தர் ஏற்படுத்திக் கொடுக்க, நூலகத்தின் பின்பாதையால் கனடியப் பிரதமர் வெளியேறினார்.

இதுதான் எங்கள் தமிழ்த் தலைவர்கள் எம் மக்களுக்குச் செய்த உதவி.

என்ன செய்வது எங்களுக்கான நீதி கிடைப்பதை நிதி தடுத்து நின்றது. நக்குண்ட தலைவர்கள் நாவிழுந்து நின்றனர் இதுதான் உண்மை.

ஆக, தமிழ் மக்களுக்குச் செய்த துரோகங்களுக்கு சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைவர்களும் கந்தறுந்து காவடி எடுப்பர். இது அறத்தின் மீதான நம்பிக்கை.

இஃது ஒருபுறமிருக்க, இப்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஏலவே மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் அதில் ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார்.

இருந்தும் பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தை – யாழ்ப்பாணத்துக்கான வருகையை நம் தமிழ்த் தலைவர்கள் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அதிலும் குறிப்பாக, அன்றைய வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது பிரதமர் மோடி மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். எனினும் விக்னேஸ்வரன் அதனைத் தக்கமுறையில் கையாளவில்லை.

ஏன் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்கள் அவருக்குக் கிடைத்திருந்தும் அவர் அதனை தவிர்த்தார் என்ற உண்மையை நீதியின்பால் கூறியே ஆக வேண்டும்.

சரி, பரவாயில்லை. இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அதன்போது தமிழ்த் தரப்புகள் அவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என இவ்விடத்தில் முன்கூட்டியே எழுதியிருந்தோம்.

சந்திப்புக்கான வாய்ப்பு உண்டென அறிய முடிகிறது. இச்சந்திப்பையேனும் நுட்பமாக – எமக்குச் சாதகமாக கையாளுங்கள்.

பிரதமர் மோடியிடம் கேட்க வேண்டியதை முன்கூட்டியே கூடித் தீர்மானியுங்கள். இந்தச் சந்தர்ப்பத்தையும் சந்திப்பையும் தயவு செய்து போட்டு உடைத்துவிடாதீர்கள்.

# ‘ஆனையிறவு உப்பு’ எனப் பெயரிடுக சிறீதரன் எம்.பி அவசர கடிதம்

(கிளிநொச்சி)

ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதிசெய்யுமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தின் தேவை. 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்று (நேற்று) முதல் (29) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், “ஆனையிறவு உப்பு” என்ற அடையாளப் பெயர் “ரஜ லுணு” என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிடைக்கும் தகவல் அதிர்ச்சியளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும் முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும் இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமையும்.

குறிப்பாக கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை “ஆனையிறவு உப்பு” என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ந-7)

## சீரணியில் இன்று சங்காபிஷேகம்

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியும் சங்காபிஷேகமும் இன்று (30) இடம் பெறும்.

இதன் போது கும்பாபிஷேக மலர் வெளியிட்டு வைக்கப்படும். இன்று மாலை நாதஸ்வர தவில் கச்சேரியுடனும் நாட்டிய சமர்ப்பணத்துடனும் அம்பாளின் வீதியுலா இடம் பெறும். (ந-7)

# போரினால் வடக்கில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் மீளத்திறக்கப்படும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் உறுதி

(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை மீள ஆரம்பித்ததைப் போன்று வடக்கில் போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. இதன் ஊடாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பும் அதிகரிக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தித் தொழிற்சாலையில் உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (29) இடம்பெற்றது.

இதன்போது இந்த விடயம் தொடர்பில் ஆளுநர் நா.வேதநாயகன் உரையாற்றுகையில் வடக்கு மாகாணத்து இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்கிய பல தொழிற்சாலைகள் போரினால் மூடப்பட்டுள்ளன. இதனால் வேலைவாய்ப்பின்மை எமது மாகாணத்தில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஆனையிறவு உப்பு தொழிற்சாலையை மீள முழு வீச்சில் இயக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனையிறவு உப்புக்குத் தனித்துவமான மதிப்பு இருக்கின்றது. அந்த வகையில் இதை மீளச் செயற்படுத்துவதானது சிறப்பானது. எதிர்காலத்தில் ஆனையிறவு உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது மாகாணம் மேலும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும், எனக் குறிப்பிட்டார். (ந-7)

# மியன்மாரை உலுக்கிய நிலநடுக்கம் 1000 ஐ தாண்டியது பலி எண்ணிக்கை

## மேலும் அதிகரிக்கலாம் என அச்சம்

மியன்மார் நாட்டில் நேற்று முன்தினம், இரண்டு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. ரிக்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக பதிவாகின. இது தாய்லாந்திலும் மிகப் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியது.

பாங்கொக் நகரில் சில வானுயர்ந்த கட்டடங்கள் சரிந்து விழுந்தன. நிலநடுக்க இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோர்எண்ணிக்கை 1000 ஐ தாண்டியுள்ளது. 2000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மேலும் உயிர்ப் பலி அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மண்டாலே நகரத்தின் அருகே இர்ரவாடி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த. 90 ஆண்டுகள் பழைமையான பாலம் உடைந்தது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் மியன்மாரின் அண்டை நாடான தாய்லாந்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தலைநகர் பாங்கொக்கில் வானுயர்ந்த கட்டடங்கள் குலுங்கின.

கட்டுமானப் பணி நடைபெற்று வந்த 30 மாடிக் கட்டடம் மண்ணுக்குள் புதைந்ததில் 10 பேர் உயிரிழந்தனர். 90 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என அந்நாட்டின் இராணுவ அமைச்சர் பும்தம் வெசாய சாய் தெரிவித்தார். (நி-8)

# மோ.சைக்கிள் விபத்து படுகாயமடைந்தவர் மரணம்

(மல்லாவி)

மல்லாவி இளம் மருதங்குளம் பகுதியில் எருமை மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

நட்டாங்கண்டல் மூன்றுமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த இராமலிங்கம் தங்கேஸ்வரன் (வயது -52) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த வியாழக்கிழமை (27) மைத்துனரின் பிறந்த நாளிற்குச் சென்றுவிட்டு இரவு 7.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த அவர் நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்திய சாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நட்டாங்கண்டல் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ந-7.60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)



## நட்புக்கும் பாசத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கும் மீன இராசி நேயர்களே!

29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**மீனம்:** நட்புக்கும், பாசத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கும் மீன ராசி நேயர்களே, நீங்கள் எல்லோரையும் எளிதில் நம்புபவர்கள். மனிதநேயம் அதிகம் கொண்டவர்கள். உழைப்புக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

**கிரகநிலை:** இதுவரை உங்களது அயன சயன போக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி ராசிக்கு வருகிறார். மூன்றாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சரளமான பணவரவால் சந்தோஷம் அடைவீர்கள். நம்பிக்கையுடன் உங்கள் பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். புதிய முதலீடுகளில் தைரியத்துடன் ஈடுபடுவீர்கள். அதில் உங்களின் முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். பழைய கடன்களும் வசூலாகும். உங்கள் எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் மறையும். சிந்தனையில் தெளிவு உண்டாகும்.

சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். ஆன்மீகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பலனடைவீர்கள். மனஉறுதி உண்டாகும். கவலைகள் மறைந்து மகிழ்ச்சி பிறக்கும். ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரங்கள் சூடுபிடிக்கும். தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகளைக் கேட்பீர்கள். வெளிநாட்டுப் பயணங்களைச் செய்வீர்கள்.

சேமிப்பு விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசியவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உண்மை நிலையைப் புரிய வைத்து, நட்பைத் தக்க வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். பெற்றோர் மற்றும் நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மன வருத்தங்கள் முற்றி லும் நீங்கும். குறைந்த அளவு முதலீட்டிலும் அதிக இலாபத்தை அள்ளுவீர்கள். எண்ணங்களுக்குத் தகுந்த செயல் வடிவம் கொடுப்பீர்கள். எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. உடல் உபாதைகள் ஏதேனும் இருப்பின், இக்கால கட்டத்தில் தீரும். வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள்.

அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும். சென்ற இடத்திலெல்லாம் பிரச்சினையை சந்தித்தவர்கள் கூட இந்தக் காலகட்டத்தில் விரும்பி வரவேற்கப்படுவார்கள். சிலர் மனம் விரும்பிய வீட்டிற்குக் குடிபெயர்வார்கள். தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். களவு போயிருந்த பொருட்கள் திரும்பவும் கிடைக்கும். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு அவை மளமளவென்று நடந்தேறும். "என்ன நடக்குமோ?" என்று பயந்த விடயங்கள்கூட மகிழ்ச்சிகரமாக முடிவடையும்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். வருமானம் சீராக இருக்கும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்குமென்றாலும் அவர்களிடம், மரியாதைக்குரிய தொலைவில் இருந்து பழகுவது நல்லது. சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்திற்குள் நிறைவேறிவிடும். உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.




வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். புதிய வாடிக்கையாளர்களையும், புதிய சந்தைகளையும் நாடிச் செல்வீர்கள். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் சிரமங்கள் உண்டாகாது.

அரசியல்வாதிகள், தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் தொண்டர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்கள் கௌரவம் உயரும். சமுதாயத்தில் அந்தஸ்து உண்டாகும். உங்களின் முயற்சிகள் உங்களை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் ரசிகர்களுக்காகச் செலவு செய்வீர்கள். சகப்பணியாளர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

பெண்களுக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து இன்பகரமான செய்திகள் வந்து சேரும். கணவரிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். கணவரின் உறவினர்களோடு வீண் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம்.

மாணவர்கள் படிப்பில் வெற்றிவாகை சூடுவீர்கள். மேலும் உங்கள் ஞாபக சக்தியும், அறிவாற்றலும் பெருகும். அதேநேரம் விளையாடும் நேரங்களில் கவனமாக இருக்கவும். பெற்றோர்களின் ஆதரவுடன் உங்களின் எதிர்காலக் கல்வித் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது. குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். அவர்களுக்காக பாடுபடுவீர்கள். திட்டமிட்டு செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும். எதிர்பாராத செலவு உண்டாகும்.

**உத்திரட்டாதி:** சொத்து மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். உஷ்ணம் சம்பந்தமான நோய் ஏற்படும். வீண்பயம் ஏற்படும். ஏற்கனவே செய்த காரியங்களுக்கான பலனை அடைய வேண்டி இருக்கும். சிலர் வீட்டை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடலாம்.

**ரேவதி:** வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள். அயலவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

**பரிகாரம்:** பைரவரை வழிபட்டு வரவும். நவக்கிரக துதி சொல்லவும். அறுகம்புல்லை எடுத்து மாலையாக கட்டி அருகிலிருக்கும் விநாயகருக்கு அர்ப்பணித்து வர அனைத்தும் தடையில்லாமல் நடந்தேறும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆனையிறவு...

பட்டுள்ளமை பலத்த விமர்சனங் களைத் தோற்றுவித்துள்ளது.

ஆனையிறவு உப்புக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனியான கிராக்கியுள்ள நிலையில், பல வருடங்களுக்குப் பின்னர் மீளுருவாக்கம் செய்யப்பட்ட ஆனையிறவு உப்பளத்தின் வெளியீடுகளில் 'ரஜ லுணு' எனும் சிங்களச் சொல் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வடக்கில் இன்று...

களம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அத்திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்; வடக்கு, வடமத்திய, வடமேல்மாகாணங்களிலும் கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான வெப்பநிலை நிலவக்கூடும் என்றுள்ளது.

இதேவேளை அதிக உஷ்ணத்தினால் நீரிழப்பு ஏற்படாதிருக்க போதுமானளவு தண்ணீரைப் பருகுமாறும் முடிந்தளவு வெயிலில் பயணிப்பதைத் தவிர்க்குமாறும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ந-7)



















## பிரதமர்...

பிரதமரின் இலங்கை விஜயத்தின் இரண்டாம் நாளான ஏப்ரல் 5ஆம் திகதி இடம்பெறும் என உயர்ஸ் தானிகராலயம் கூறியுள்ளது.

மேலும் இக்கலந்துரையாடலில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் ஏழு பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 4 பேரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) சார்பில் ஒருவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் இருவருமாக 7 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சி.வி.கே.சிவஞானம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதனுடன் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவருமாக பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. (ந-7)

## வலுப்பெறுகின்...

யக்கூறுகள் உருவாகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் மீண்டும் தலை தூக்கியுள்ளன.

எமது நாட்டின் ராஜதந்திர செயல் முறையும் வெளிவிவகார அமைச்சின் பணிகளும் பலவீனமடைந்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் இதன் பின்னணியில் உள்ளன.

அல் ஜஸீரா தொலைக்காட்சி நிகழ்ச்சியினூடாக ரணில் விக்கிரமசிங்க மீது ஏதோ ஒரு வகையில் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றே விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளனர். புலிகளை மீண்டும் எழுச்சி பெறச் செய்ய அவர்கள் செயற்படுகின்றார்கள்.

சிலர் ஈழத்தை அமைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். மேலும் சிலர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விற்றுச் சாப்பிடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்கள் கண்காணிக்கப்பட வேண்டிய குழுவினரே. அவர்கள் சர்வதேச ரீதியில் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

விசேடமாக ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளில் உயர் பதவிகளை வகிக்கின்றனர். தற்போதைய அரசாங்கத்தின் அலட்சியமும் இராஜதந்திர விவகாரங்களில் திறமையின்மையும் இராணுவத்தினருக்கு எதிரான கடுமையான சூழ்நிலைக்கு வழிவகுத்துள்ளது. இது இன்னும் தீவிரமாகும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார். (ந-7)

## மோ.சைக்கிள்...

லேயே உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏழாலை [illegible]

சேர்ந்த சிவராசா பிரவீன் (வயது-19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,33)

## பாதுகாப்பு...

காப்பு ஒத்துழைப்புக்கான கட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையின் தலையீட்டுக்குப் பின்னர் கைச்சாத்திடப்படும் பாதுகாப்புத் தொடர்பான முதலாவது ஒப்பந்தம் இதுவாகும்.

அத்துடன் பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தின்போது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் முயற்சிகள் தொடர்பான உடன்படிக்கையும் கைச்சாத்தாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, வலு சக்தி, உட்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ந-7)

## தேர்...

வித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி தேர்தலின்போது வாக்குகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது.

வாக்காளர்கள் இலகுவாக வாக்களிக்கக் கூடிய வகையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அமையும்.

இதேவேளை தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

## தலை...

கொண்ட விசேட [illegible]

போது அந்தக் கடற்பகுதியில் மிதந்துகொண்டிருந்த கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளனர்.

சுமார் 124 கிலோ 392 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு சுமார் 49 மில்லியன் ரூபாய்க்கும் மேல் இருக்கும் எனத் தெரிய வருகின்றது.

மேலும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. (நி-8,285)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E (A/L)

**இணைந்த கணித வகுப்புக்கள்**

G.C.E (A/L) இணைந்த கணித வகுப்புக்கள்
Personal Class & Group Class
அனுபவமிக்க ஆசிரியரினால் விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படும். (967)

**076 843 1371**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## A/L PHYSICS CLASS

அரச பரீட்சை புள்ளியிடல் திட்ட அனுபவமும்
மேலதிக பிரதம பரீட்சகர் அனுபவமுடைய
விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் இலகு
முறையில் வசதியான நேரத்தில்
தனிப்பட்ட, குழு வகுப்புகளுக்கு தொடர்புகொள்ளவும் (3750)

**077 600 4896**

Ranjit Sir B.Sc, P.G.D.E, S.L.P.S - I

## கல்வி

ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புக்கள்
அனுபவமுள்ள அரச பாடசாலை
ஆசிரியர்களால் தனிப்பட்ட, குழு
முறைகளில் கற்பிக்கப்படும்.
புற நகர்ப் பிரதேச மாணவர்களும்
தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு (3748)

**077 54 22 513**
**077 62 08 845**

## G.C.E A/L - 2027

**தமிழ்/ஆங்கில மொழிமூலம்**
**கணிதம் - உயிரியல் - தொழில்நுட்பம்**
**பிரிவுகளுக்கான வகுப்புக்கள்**

- இணைந்த கணிதம் : திரு. T. சத்தியசீலன் BSc, Dip in Edu.
- உயிரியல் : திரு. S. நித்தியானந்தன் BSc (Hons) PGDE, MEd.
- பௌதிகவியல் : செல்வி ஜெ. டிசாயினி BSc (Hons)
- இரசாயனவியல் : திரு. N. தவசீலன் BSc (Hons) PGDE.
  திரு. R. இமயகரன் BSc (Hons).
- தகவல் தொழில்நுட்பம் (ICT) : திரு. M. சோபிதன் BEng (UK).
- E-Tech : திருமதி S. நந்தினி MSc (UK).
- Bio Tech : செல்வி N. கீர்த்திகா BBST (Hons). (978)

ஆரம்பம்: 07.04.2025 திங்கள் பி.ப. 3.30 மணி
(முதலில் இணையும் 20 மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்)

பதிவுகளுக்கு : 070 686 7695 இற்கு தொடர்பு கொள்ளவும்.
No. 188, K.K.S Road, Chunnakam.
T.P: 077 386 7695, 076 897 6665, 070 697 6665

## கனடா CANADA

நிரந்தர குடியுரிமை PR

கல்வித் தகமை: A/L & Any HEATH CARE DIPLOMA & 06 Month Work Experiance

**IELTS General - 4.5 Overall**

IELTS வகுப்புகள் / CARE HOME பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன

குடும்பத்துடன் பயணிக்க அதுவும் நிரந்தர குடியேற்றவாசியாக பயணிக்க அரிய சந்தர்ப்பம்

**WEC COLLEGE**

ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்) 0779265447
(981) சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே) 0217200989

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (907)

**075 033 6759**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**SVIS Pharmacy**
1. Nursing officer (பெண்கள் மட்டும்)

**SVIS Construction**
1. Technical Officer
2. Store Keeper (ஆண்கள் மட்டும்) (979)

**077 211 0996**
**077 245 4224**

புத்தூர் சந்தி, மீசாலை.

---

தேன் ஒரு அருமருந்து, சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால்,
இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும்.
இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல
பயன்களைக் கொண்டது,

## Royal றோயல் சுத்தமான தேன்

*உங்கள் முழுக் குடும்பத்தின்*
ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே
பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.



**ஆய்வுகூடத்தில் தரம்**
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள
அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும்,
பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries® (C-2568)

## லைடன் புடவை நிலையம் யாழ்ப்பாணம்



எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு, உயிர்த்த ஞாயிறு
தினங்களை முன்னிட்டு எமது நண்பர்கள்,
அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரிற்கும்
அனைத்து வகையான துணி வகைகள்
ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள்,
குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும்
மாணவர்களுக்கான சீருடைவகைகள்
போன்ற சகலவிதமான பொருட்களையும்
10% விசேட விலைக்கழிவில்
பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள் (C-2569)

**10%** 01.04.2025 - 19.04.2025

வாடிக்கையாளர் நலன்கருதி 06.04.2025
ஞாயிற்றுக்கிழமை மற்றும் 13.04.2025
ஞாயிற்றுக்கிழமைகளில் எமது வியாபார நிலையம்
திறக்கப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

**Leyden Textile Center**
410, Hospital Road, Jaffna. 0212222381

## KBK கந்தர்மடம்

புதிய பிரிவு
**A/L 2027 கணக்கீடு**
தமிழ் ஆங்கில மொழி மூலம் (996)



**MR.BALAKAJEN** SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI),
Dip.in.Edu(OUSL), M.com(Hons)
Acc.spl

ஆரம்பம்
31.03.2025 திங்கள் மாலை
தமிழ் மொழி மூலம் 4.00 மணி
ஆங்கில மொழி மூலம் 5.00 மணி

A/L 2025/ DAY / 2026
பிரிவுகளுக்கான வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

ADMISSION OPEN

**077 452 0043**

## கட்டடம் வாடகைக்கு

சங்கானை அபான்ஸ்
கம்பனிக்கு மேல் உள்ள
தளம் வாடகைக்கு
உண்டு. (3764)

**077 710 9638**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-2573)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## மணமகன் தேவை

1989 ஆம் ஆண்டு பிறந்த
சதய நட்சத்திரம், கிரக பாவம்
10 ¼, கொழும்பை வசிப்பிடமாகக்
கொண்ட மணமகளிற்கு
பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு (3758)

**077 3040 736**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி
வீதியில் 1 ½ பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
(NO Brokers)
தொடர்புகளுக்கு (3764)

**076 742 4301**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 220/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 259/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 399/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 788/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 220/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000~~/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560~~/= |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240~~/= |

Max 01




1010/= ~~1050~~/=




50/= ~~80~~/=

தரமான பொருட்களை சிறந்த
விலையில் கொள்வனவு
செய்திடுங்கள். மேலதிக
விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (980)

Happy Supermarket
0777 8080 30

## விற்பனைக்கு

8 சோடி வாங்கு மேசைகள்(மலைவேம்பு),
8 கொன்கிறீட் கல் அரியும் அச்சுகள்
(இரும்பு அச்சு 8, மர அச்சு 2). 2 கம்பிக்
கட்டைத் தூண் அச்சுகள் மற்றும் 2 கெவர்
தூண் அச்சுக்கள், நடை பாதைக்கல்
பிளாஸ்ரிக் அச்சு 100 என்பன
விற்பனைக்கு உண்டு. (3739)

**077 711 5876**

## காணி குத்தகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில்
8 பரப்பு (80 பேர்ச்) காணி
நீண்டகால குத்தகைக்குத்
தேவை.
தொடர்புகளுக்கு : (3154)

**076 444 9377**

---

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம்
கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/-
முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல்
பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-2572)
021 222 2695, 077 429 0613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.